பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 ஆடி 17 செவ்வாய்க்கிழமை (02.08.2005) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் :249

# ஜனாதிபதித் தேர்தல் குறித்து சந்திரிகா உயர்நீதிமன்றில் கருத்தைக் கோருகிறார்

## இவ்வாரம் விசேட மனுத் தாக்கல்

கொழும்பு,ஓகஸ்ட் 2

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் எப்போது? இதுகுறித்து ஆலோசனை தெரிவிக்கும்படி உயர்நீதிமன்றத்தைக் கோருவதற்குத் தீர்மானித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க என்று நம்பகமாகத் தெரியவருகின்றது.

இதுதொடர்பாக ஆலோசனை கோரும் ஜனாதிபதியின் ஆவணம் அடுத்துவரும் நாள்களில் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று தெரியவருகின்றது.

- இவ்வாறு ஆலோசனை கோருவது குறித்து சட்ட நிபுணர்களோடு கலந்துரையாடியுள்ள ஜனாதிபதி, இதுதொடர்பான தமது ஆவணத்தின் - மனுவின் - வடிவத்தையும் இறுதிசெய்துள்ளார் எனத் தெரிகின்றது. இந்த விடயம் உயர்நீதிமன்றத்தில் பரிசீலிக்கப்படும்போது ஜனாதிபதித் தேர்தல் அடுத்த வருடமே நடத்தப்படவேண்டும் என்ற ஜனாதிபதியின் கருத்தை வலியுறுத்தி சிரேஷ்ட சட்டத்தரணியும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எச். எல். டி சில்வா, சிரேஷ்ட சட்டத்தரணி

(16 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே பட்டியல்கள்

நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ள பட்டதாரிகளின் பெயர்ப் பட்டியல்கள் உள்ளே 2 ஆம், 15 ஆம், 16 ஆம் பக்கங்களில் பிரசுரமாகி உள்ளன.

திருகோணமலை கல்வி அமைச்சில் இருந்து பட்டியல்களைப் பெற்றுக்கொள்வதில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட தாமதம் காரணமாகப் பட்டியல்கள் ஆங்கில மூலத்தில் உள்ளவாறே அப்படியே தரப்படுகின்றன.

அச்சிடும் நேரத்தைக் கருத்திற்கொண்டு தமிழில் மொழிபெயர்த்து வெளியிட முடியாமைக்கு வாசகர்கள் பொறுத்துக்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

பெயர்ப் பட்டியல்களின் பிரதிகளை இன்று காலை 9 மணிக்குப் பின்னர் உதயன் அலுவலகத்தில் பார்வையிடலாம்.

## கனடாவில் தமிழ் இளைஞர் சுட்டுக்கொலை!

ரொரண்ரோ , ஓக.2

கனேடிய நகரமான ரொரண்ரோவில் கடந்த சனிக்கிழமை இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று கனேடியப் பொலீஸார் கூறுகின்றனர்.

உமாதேவன் தியாகராஜா (வயது 26) என்ற இளைஞரே இந்தச் சம்பவத்தில் கொல்லப்பட்டவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். வோடன் -பிஞ்ச் என்ற இடத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## புரிந்துணர்வு ஒப்பந்தத்துக்கு எதிரான வழக்கு ஒக்ரோபர் 23 இற்கு ஒத்திவைப்பு

கொழும்பு, ஓக.2

இலங்கை அரசும் விடுதலைப் புலிகள் இயக்கமும் செய்துகொண்ட - போர் நிறுத்தத்துக்கு வழிசெய்த - புரிந்துணர்வு ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவேண்டும் எனக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் மீதான விசாரணையை மேன்முறையீட்டு நீதிமன்றம் ஒக்ரோபர் 23 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தது.

2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதி அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்குமிடையில் செய்துகொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்யவேண்டும் எனக் கோரி ஜே.விபி., சிங்கள ஜாதிக சங்கமய, ஜாதிக ஹெல உறுமய ஆகிய தரப்புகள் தாக்கல் செய்திருந்த மனுக்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களான கே.ஸ்ரீபவன்,

(16 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டக்களப்பில் கிரனேட் வீச்சு; ஒருவர் பலி!

மட்டக்களப்பு , ஓக.2

மட்டக்களப்பு, சின்ன ஊறணியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற கிரனேட் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டார்.

திறந்திருந்த மதுபானக் கடையொன்றின் மீதே கிரனேட் வீசப்பட்டது என்று பொலீஸார் தெரிவித்தனர். இனந்தெரியாத சிலர் கடை மீது கிரனேட்டை வீசியெறிந்து விட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர் என்றும் அவர்கள் கூறினர்.

இந்தத் தாக்குதலில் கடையில் பணியாற்றி வந்தவரான மட்டக்களப்பு, கொக்குவிலைச் சேர்ந்த இரத்தினசிங்கம் சிவகுமார் (வயது 30) என்பவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

தாக்குதலை நடத்தியவர்கள் மோட்டார் சைக்கிளில் தப்பிச்சென்றனர் என்று பொலீஸார் கூறினர். (க)

## ஆணையாளரின் பதவிக்காலம் நீடிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.2

யாழ். மாநகரசபை ஆணையாளர் கலாநிதி க.குணராசாவின் பதவிக்காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் வரை நீடிக்கப்பட்டுள்ளது. இவரது மீள்நியமனப் பதவிக்காலம் கடந்த ஞாயிற்றுக்கிழமையுடன் நிறைவடைய இருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஓ-7)

## மதில் வீழ்ந்து சிறுமி மரணம்!

கிளிநொச்சி,ஓக.2

கிளிநொச்சியில் மதில் உடைந்து வீழ்ந்தபோது இடிபாட்டுக்குள் சிக்கிய சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

நான்காம் வாய்க்கால் கிளிநொச்சியைச் சேர்ந்த சி. நிதுசா (வயது-2) என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

கிளிநொச்சி மாவட்ட பிரதேச மட்ட மெய்வன்மைப் போட்டியை பார்வையிட மேற்படி சிறுமி தாயாருடன் சென்றிருந்தார் என்றும்-

வழியில் கட்டுப்பட்டுக்கொண்டிருந்த மதில் ஒன்றை அவர்கள் தாண்டியபோதே அது வீழ்ந்து சிறுமி உயிரிழந்தார் என்றும் - கூறப்படுகிறது. (ஓ-305-ரி)

ஏழாலை மேற்குப் பகுதியில் நேற்று

## பிறந்து ஒருநாள்கூட ஆகாத சிசு பற்றைக் காட்டிலிருந்து மீட்பு!

ஏழாலை, ஓக.2

பிறந்து ஒரு நாள்கூட ஆகாத பெண் சிசு ஏழாலைப் பகுதிப் பற்றைக் காட்டிலிருந்து நேற்றுக் காலை உயிருடன் மீட்கப்பட்டது.

ஏழாலை மேற்கைச் சேர்ந்த இருசிறுவர்கள் நேற்றுக் காலை 9 மணியளவில் பனங்காட்டுப் பகுதியில் விறகு எடுப்பதற்காகச் சென்றனர். அவர்கள் விறகு தேடியபோது பற்றைப் பகுதியிலிருந்து குழந்தையின் அழுகைச் சத்தத்தைக் கேட்டனர். இது குறித்து அந்த வழியே சென்றவர்களிடம் சிறுவர்கள் தெரிவித்தனர். பொதுமக்கள், ஏழாலை மத்தி கிராமசேவகரிடம் முறையிட்டனர்.

இதனையடுத்து, சம்பந்தப்பட்ட இடத்திற்குச் சென்ற கிராமசேவகர் அங்கு உரப்பை

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகம், இணுவில், தெல்லிப்பழையில் உணவகங்களில் அதிரடிச் சோதனை!

யாழ்ப்பாணம், ஓக.2

யாழ்.சுகாதாரத் திணைக்கள உணவு - மருந்துப் பரிசோதகர் ரி.மகாதேவன் தலைமையிலான சுகாதாரக் குழு ஒன்று நேற்றைய தினம் உணவகங்களில் அதிரடிச் சோதனை நடத்தியது.

இணுவில், சுன்னாகம், தெல்லிப்பழை ஆகிய இடங்களில் இந்தச் சோதனை நடத்தப்பட்டது. இதன்போது சுகாதார விதிமுறைகளைப் பேணாத உணவகங்களின் உரிமையாளர்கள், பணியாளர்கள் கையும்மெய்யுமாகப் பிடிக்கப்பட்டனர். அவர்கள் விற்பனைக்கு வைத்திருந்த மற்றும் பரிமாறிய உணவு வகைகளும் கைப்பற்றப்பட்டன.

உணவகங்களின் உரிமையாளர்கள் மற்றும் உணவு கையாள்பவர்களுக்கு நடத்தப்பட்ட கருத்தரங்குகளில் கொடுக்கப்பட்ட

(16 ஆம் பக்கம் பார்க்க)

## சு.கட்சி இன்று மந்திராலோசனை

கொழும்பு,ஓக.2

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசார நடவடிக்கைகளை முன்னெடுப்பது தொடர்பாக ஆராய்வதற்காகவும், கட்சியின் எதிர்காலத் திட்டங்களை வகுப்பதற்காகவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட கூட்டமொன்று இன்று நடைபெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனம்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர் மாநாட்டில் தீர்மானம்

நாகர்கோயில் , ஓக.2

இலங்கைக்கு இந்தியா இராணுவ ரீதியான உதவி வழங்கக்கூடாதென்று தமிழகத்தின் நாகர்கோயிலில் இடம்பெற்ற உலகத் தமிழர் மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஓ)

## மதமாற்றத் தடை தொடர்பான சட்டமூலத்துக்கு அமெ. அதிருப்தி

பௌத்த சாசன அமைச்சால் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட உள்ள மதமாற்றத்தைத் தடுப்பது தொடர்பான சட்டமூலம் குறித்து அமெரிக்கா அதிருப்தி வெளியிட்டுள்ளது.

வற்புறுத்தியோ அல்லது ஆசை காட்டியோ ஒரு நபர் மதமாற்றம் செய்யப்படுவதைத் தடுக்கும் சட்டமூலம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இச்சட்ட மூலத்தை கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் அமைச்சரவை அங்கீகரித்தது.

இது கடந்த ஜூன் மாதம் 27 ஆம் திகதி வெளியான வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இச்சட்ட மூலம் தொடர்பாக அமெரிக்க அரசு அதிருப்தி தெரிவித்துள்ளது. அமெரிக்க அரசின் பிரதி ராஜாங்கச் செயலாளர் கிறிஸ்

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வெள்ளவத்தையில் மாணவர்குழு மோதல்!

கொழும்பு,ஓக.2

கொழும்பு பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள இரண்டு பிரபல பாடசாலை மாணவர்கள் நேற்றுப் பிற்பகல் காலி வீதியில் இறங்கி மோதலில் ஈடுபட்டனர். இந்த மோதலின்போது மாணவர்கள் பலர் காயமடைந்தனர். தனியார் பஸ்கள் நான்கு சேதமாக்கப்பட்டன என்று வெள்ளவத்தைப் பொலீஸார் தெரிவித்தனர்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே கல்விச்சுடர்

5 ஆம் தர புலமைப் பரிசில் மாணவர்களுக்கான கல்விச்சுடர் இலவச இணைப்பிதழ் இன்றைய உதயனுடன் வெளியாகின்றது.

# வடக்கு -கிழக்கு பாடசாலைகளில் நிலவும் மூன்று பதவிகளுக்கு ஆட்சேர்க்க 4,964 பட்டதாரிகளுக்கு நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஒக.2

வடக்கு - கிழக்கில் உள்ள அரச பாடசாலைகளில் நிலவும் ஆசிரியர்/ திட்டமிடல்/ நிதி உதவியாளர் பதவிகளுக்குப் பட்டதாரிகளை நியமனம் செய்வதற்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் அந்தந்த மாவட்டங்களில் நடைபெறவிருக்கின்றது. வடக்கு-கிழக்கில் 4 ஆயிரத்து 964 பேர் இந்த நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர். யாழ். மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களில் நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டுள்ள 2 ஆயிரத்து 429 பட்டதாரிகளுக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 5 ஆம் திகதி முதல் 10 ஆம் திகதி வரை யாழ். கல்வி வலயத்தில் இடம் பெறவுள்ளது. நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான கடிதங்களை நாளை யாழ். கல்வி வலயத்தில் பெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 4 ஆம், 5ஆம் திகதிகளில் கிளிநொச்சி கல்வி வலய அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகத்தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான கடிதங்களை இன்று கிளிநொச்சி வலய அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மன்னார் மாவட்டத்துக்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் 7ஆம் திகதி மன்னார் கல்வி அலுவலகத்தில் நடைபெறும். நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டவர்களுக்கான கடிதங்களை நாளை மன்னார் கல்வி அலுவலகத்தில் பெறலாம். வவுனியா மாவட்டத்துக்கான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 6 ஆம் திகதி வவுனியா தெற்கு கல்விவலய அலுவலகத்தில் நடைபெறும். இவர்களுக்கான அழைப்புக்கடிதங்களை இன்று வவுனியா தெற்கு கல்விவலய அலுவலகத்தில் பெறலாம். அழைப்புக்கடிதம் கிடைக்காத பட்சத்தில், நேர்முகத் தேர்வுக்கான பட்டியலில் பெயர் விவரம் இருந்தால் நேர்முகத் தேர்வுக்குக் குறிப்பிட்ட திகதிகளில் சமுகமளிக்கமுடியும் எனத் திருகோணமலையில் உள்ள வலயக் கல்வி அமைச்சு தெரிவித்தது.

அதேவேளை, வடக்கு - கிழக்குக்கு வெளியே இருந்து விண்ணப்பித்தவர்களுக்கும் திருகோணமலை மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்குமான நேர்முகத் தேர்வு எதிர்வரும் 9ஆம், 10ஆம் திகதிகளில் மாகாணக் கல்வியமைச்சு அலுவலகத்தில் இடம்பெறும் என்று மாகாணக் கல்வியமைச்சு அதிகாரி தெரிவித்தார். இவர்களுக்கான கடிதங்கள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன என்று அமைச்சு அதிகாரிகள் தெரிவித்தனர். (எ-3)

**District : JAFFNA**

10506780 - CHRISTINE, J., 10514360 - KIRIHARAN, T., 10480303 - NALAYINI, S., 10500470 - SASIKARAN, M., 10500101 - THILLAINATHAN,T., 10542644 - ALEXBENADICT, R.G., 10507629 - AMIRTHAGOWRY, S., 10502484 - ARULMOLI, A., 10502879 - BAKEERATHY, S., 10506165 - GAYATHIRY, K., 10504501 - JAMUNAMALAR, C., 10504852 - JEGATHEEPAN, B., 10507880 - JEYA GOWRY, S., 10497143 - JEYAMANGALATERAD, A., 10490068 -JEYANTHINY, T., 10489486 - JEYARAJAH, A.S., 10499361 - JEYASITHIRA, S., 10511622 - KALAIVANY, A., 10496836 - KALASAKTHY, N., 10490101 - KANTHAN, K., 10497801 - KESAVAN, P., 10511241 - KETHEESWARY, K., 10479921 - KULASEKARAN, K., 10511485 - KUNALINEE, M., 10510172 - MANCHULA, A., 10507112 - MANORANJANI, L., 10503843 - MOHANASUNTHARY, V., 10481941 - NIRRUJA, S.

10512571 - PARIMALA, J., 10496867 - PEMINA, K., 10496822 - PREMALOGY, S., - 10508516 - PREMILA, S., 10508638 - PRISHINI, A.C., 10499374 - RAJANI, T., 10508439 - RAJETHA, T., 10492241 - RATHITHARAN, S., 10511207 - RATHY, V., 10503598 - SASIKALA, R., 10511835 - SATHTHIYANITNY, T., 10500421 -SELVAKKUMARAN, N.

10480611 - SENTHURAN, S., 10510155 - SHAMINI, A., 10502500- SHANTHINI, V.D.L., 1051011120 - SHARMINI, A., 10505233 -SIVAJINI, T., 10489610 - SIVAMATHY, K., 10509755 - SIVASAKTHIVEL, I., 10488079 -SIYAKALA, I., 10504410 - THARMILA, M., 10513121 - UMAKIRI, I., 10502498 -VALARMATHY, R., 10501201 -VARATHARAJESWARASARMA, U., 10481881 - VASANTHINY, R., 10492206- VIJAYAVANITHA, M., 10510982 - VINOTHA, N., 10497538 - VIRATHASHAARANY, K.

10501413 - WALWIN, I., 10498928 - YASOTHARA, S., 10512659 - YATHUSHA,M., 10509678 - YOGESWARY,S., 10496291 - ANITHA, P., 10488541 - ARUDCHELVAN, T., 10499695 - BALTHAS, Z.J., 10480901 - CHITHRADEVI, N., 1051176121 - FAREENA, A.D., 10503721 - GANESHANANTHAN, M., 10507828 - JANARTHANAN, S.,10507862 - JAYASRI, S.J., 10497109 - JEYARAJA, P.E., 10504818 - JEYATHEEPAN, T., 10520728 - JEYATHEVY, N., 10498365 - KAJENTHIRAN, N., 10493047 - KAMSATHVANY, P., 10500760 - KARTHIKEYINI, T., 10494468 -KEETHAPRIYAN, T., 10491214 -KUHAPRASATHAN, B.

10489671 - LAGUTHAS, G., 10498209 - LATHEESKARAN, S., 10496026 - MANAKARAN, S., 10494789 - MANOKAR, M., 10504272 - MARJATHASAN, G.D.,10507495 -MARY DULA, J., 10506148 - MATHUMATHY, M., 10498274 - MAURACHSELVAN, N., 10495372 - MAYOORAN, T., 10491276 -NALAYINI, P., 10512017 - NANTHINI, T., 10504562 - NETHAJI, S., 10503337 - NIL ANI, B., 10499985 - NIMALATHAS, K., 10500739 -NISHANTHAN, P.Y., 10493903 - PRABAKARAN, S., 10499113 - PUVANATHAS, M., 10505477 - RAJEEVAN, S., 10499421 - RAMANAN, N., 10486368 - RAMESH, S., 10488125 - RAMESHWARAN, N., 10493917 -RAMESKUMAR, S., 10504804 - RATHIGA, V., 1049971121 - REGINOLD, J.,10503658 -SATHIYABAMA, K., 10525219 - SELVACHANDRAN, S., 10514203 - SELVATHANY, S., 10509832 - SHAILLAJA,N., 10500756 - SINTHUJA, P., 10510921 - SINTHUJA, S., 10500071 - SIVAKUMAR, S., 10488065 - SRIKANTH, J., 10488108 - SUKUMAR,T., 10512875 - SUSEENDRAN, M.

10494181 - SUTHAKARAN, R., 10498777 - SUTHARSAN, S., 10520731 - THABOTHINI, K., 10898668 - THARMATHAS, S., 10502973 - THARSHINI, R.R., 10504441 - THARSINI, T., 10495048 - THAYALAN, P., 10489780 - THEEBAN THELISHAN, A. 10506546 - THILEEPAN, A., 10510401 - THIRUGANESARAJAH,T., 10508962 -THUSHYANTHAN, A., 10492299 - VIGNAMOHAN, S., 10497161 - VIJAYABALA, S.K., 10480871 - VISVANATHAN, S., 10494454 - VITHIYANANATHAN, R., 10492683 -VITHYAPARAN,V., 10534513 - AHALIYA, K., 10507893 - ANINTHITHAI,G., 10502635 -ARULANANTHAKUMAR, K., 10504025 -BAKEERATHY, T., 10487056 - BAVANI, S., 10492743 - BAVANY, T., 10512997 - CHANDRAKALA, S., 10496884 - DATSHAYANY, S., 10511151 - DHARSHINI, D., 10505921 - GAJASHANTHY, R., 10503519 - GANAPIRIYA,R., 10511576 - HEMALATHA,K., 10493797 - INTHUMATHY, T., 10499175 - INTHUNESAN, S., 10495568 - JALENE, K., 10498351 - JAMUNA,T.

10502712 - JANATHA, M., 10484123 - JAYABHARATHY, T., 10506225 - JEEVA, S., 10496165 - JEGATHEESWARY, T., 10532298 - JEYASOORIYA, T., 10501262 - KAJAN, K., 10506486 - KALAICHELVI, A., 10506671 - KALAISELVI,J., 10490023 - KALAIVANEE, V., 10504731 - KALPANA, S., 10490219 - KALYANY, N., 10503323 - KANESAMALAR, N., 10495858 - KARTHIKA, R., 10488904 - KARUNAICHELVI, K., 10505918 - KAVITHA, N., 10508321 - KIRUBANANTHY,P., 10488187 -KRISHNANANTHAN, A., 10503169 - LAKITHA, N., 10502851 - LATHANGI, K., 10499417 - LOGINI, P., 10512003 - MAITHILY, K., 10506378 - MANCHUSEETHA, S., 10503020 - MARIATHAS, P., 10493399 - MARY SHAMINI,A., 10494381 - MATHANGI, T.

10503689 - MATHIYARANI, S., 10486095 - NANTHINI, T., 10503766 - NATHATHEEBA, P., 10498408 - NISHANTHYNI, G.M., 10489061 - NITHTHILA, A., 10494501 - PAMILA, M.J., 10495295 - PATHMA, E.,10504087 - PERANANTHAN, N., 10495139 -PREMAMALINY, K., 10504758 - RAHINI, K., 10500010 - RAJANI, J., 10506853 -RAJARATNAM, K., 10493051 - RAJINI, D., 10510505 - RAMESH, T., 10495983 -ROHINIVATHANI, A., 10492960 - SABESAN, P., 10507308 - SAINTHAVI, R., 10504329 - SALUSALA, B., 10489256 - SARVAJINI, S., 10490509 - SASHINDINY, N., 10510020- SASIDHARAN, S., 10491231 - SATKUNARAJAH, M.G., 10497188 - SELVACHANDRAN, N., 10490344 -SELVARAJAH, R., 10509877 - SHANTHA SEELI, K.K., 10494961 - SHANTHINI, V.,10500711 - SHIYAMAL, K., 10482702 - SHIYAMALA, P., 10493138 - SIVAGOWRI, U.

10496260 - SIVARANJANI, S., 10509249 - SOBOOBINI, S.S., 10501475 - SOMASUNDARAM, G., 10488432 - STHIRUVENY, S., 10508980 - SUBAGINI, Y., 10494363 - SUBAJINI, R., 10500708 -SUBASINI, A., 10489364 - SUJANI, T., 10510783 - SUJATHA, N., 10499573 -SUJATHA, P., 10509252 -SUJATHTHA, P., 10506900 - SUKIRTHA, S., 10502743 -SUMATH SHANTHINY, S.,10494731 - SUREKA, K., 10491839 - SUSEELA, K., 10512324 - SUTHANY, S., 10534527 - THANIKSALAM, S., 10482660 - THARANI, T., 10510704 - THARINI, S., 10498669 -THAYALINI, G., 10488324 - THAYALINI, R., 10498089 - THAYALINI, T., 10493982 -THAYANANTHINY, C.S., 10511315 -THAYAPARAN, I., 10498686 - THAYATHARSINY, T., 10488753 - THEVAKUMARY, B., 10479047 - THEVAKY, R.

10502939 - THILAKSHY, M., 10511731 - THILLAINAYAKAM, K., 10511406 -THIRIYAMBAKI, N., 10511147 - THIRUCHELVAM, K., 10479215 - THIRUMAKAL, T., 10509695 - UMA, T., 10495875 - UTHAYARAGINI, N., 10492908 - VASANTHINI, S., 10499591 - VASUKI, A., 10493830 - VASUKY, S., 10500162 - VELVILI, S., 10498183 - VENIKA, R., 10503934 - VIMALESWARY, P., 10488949 - VISVAMOORTHY, M., 10503033 - VOVANARKES, S.A., 10497251 -YOGESWARY, I., 10513239 - AMIRTHARAJENI, A., 10488202 - ANANTHY, N., 10517383 - ANIRUTHAN, L., 10481005 - ANURATHA, S., 10500449 - ARATHTY, B.,10493111 - CAROLIN, J., 10489759 -CHITHIRANGY, N., 10510948 - CHITHRANKI, T., 10490530 - CHRISTHOBER, A.D., 10509772 - COLESTINA, G., 10501811 - DEEPARAJANI, R., 10494499 - DHARSHANI, C.A.C., 10488369 - DHARSHINI,M., 10489822 - EVILIN JENITA, K., 10507234 - GNANAROJINI, D., 10503600 - GNANATHARSHINI, K., 10500603 -GOWTHTAMY,S., 10511667- IRAIMAGAL, P.

10499846 - JAMILA, R., 10490881 - JANAKI, B., 10523695 - JANARTHTHANY, K., 0501427 - JASMIN DILANI, M., 10494423 -JEYAGOWRY, V., 10509573 - JEYAKUMARY, T., 10499221 - JEYANTHY, A., 10510095 - JEYARANI, S., 10510888 - JUDERAJITHA, J., 10491842 - KAJENTHI, M., 10509707 - KALAGINI, R., 10499249 - KALAICHCHELVI, S., 10491228 - KALAICHELVI,M., 10501626 - KALAIMATHY, U., 10509403 - KALAIVANI, A., 10508317 - KALAVANI, S., 10492422 -ARUNARUBINI, V., 10479229 -KASTHURIMATHY, M., 10503016 - KAVITHA, K., 10491703 - KAVITHA, V., 10508473 - KEMAMALINI, M., 10512827 - KOLDAMEYAR, A., 10489347 - KOSALA, T., 10508456 - KUMUTHINI, B., 10509910 - KUMUTHINI, J., 10527380 - MISHANHY, S.,10492987 - NAGESWARY, K., 10509312 - NANTHAKUMAR, J., 10495051 - NESARAJ, M., 10512676 - NILAANTHY, K., 10525361 - NIRMALA, N., 10488415 - NIRUJA, P., 10499235 - NISHANTHY, S., 10507481 -PERNATHETH, A., 10508183 - PONMATHY, P., 10507771 - PRAPASHINI, S., 10496490 -PREMILA, R., 10511269 - PRIYATHARSINY, S.

10512844 - RAJANI, S., 10496685 -RAJUMESH, S., 10490756 - RANJINI, D.M.P., 10513913 - ROHINI, M., 10496623 - RUJITHA, R., 10507801 - SANTHY, R., 10504224 - SATHEESHINI, M., 10490651 -SATHEESWARY, V., 10488798 - SHIYAMALA, B., 10492163 - SHOPANA, P., 10511605 - SHUBANANTHINY, V., 10500435 - SIVAJINI, P., 10498061 - SIVAKUMARY, T., 10504622 - SIVANANTHINI, S., 10504315 - SIVANATHAN, C.Q.,10500816 - SIVANJALI, S., 10509923 - SIVASUBRAMANIAM, K., 10511593 -IYANANTHALA, N., 10495800 - SRIKANNAN, S., 10512278 - SRIPATHMANATHAN, B., 10491475 - SUBAGINI, S., 10495599 - SUBANANTHI, T., 10500240 - SUBATHRA, V., 10497984 - SUGANTHINI, S., 10500298 - SUGANTHY, P., 10500253 - SUGANYA, S., 10509270 - SUGHANYA, N., 10490941 - SUGIVA, R., 10503341 - SUMANESWARY, R.,10499266 - SUMITHA, S., 10492146 -SUTHAJINI, R., 10488585 - SUTHANTHA, K., 10500389 - SUTHARSINI, R., 10497221 -SUTHARSINY, M., 10489472 - THAMAYANTHI, R., 10502405 - THANUSHA, S., 10510627 - THARSINI, J., 10506061 - THAYALINI, P., 10495861 - THAYAMATHY, S., 10504241 -THEEPA, T., 10488861 - THIVISHA, R., 10495108 - THULASI, A., 10502115 - THUSYANTHY, K., 10510631 - VAJINA, S., 10489148 - VARAKANY, V., 10495831 -VASUGITHEVY, N., 10497451 - VIJAYAGOWRY, T., 10510519 - VIJETHA, B., 10511011 - VINOTHINI, P., 10487991 -VISHNUKUMARI, N., 10512892 -VRIDGETNALAYINI,U., 10511454 - YOHINI, K., 10500773 - AMUTHINI, G., 10512173 -GANESHARAJAH, P., 10506701 - JEYASUTHAN, T., 10509388 - JOTHILUXMY, P.

10508976 - KIRUBAINAYAGAM, P.A., 10489260 - MAGESWARAN, K., 10490313 - NANTHINI, N.,10503172 - NIRUSHAN, T., 10506728 - PAKEERATHAN, P. , 10512220 - PEREMALATHA, V., 10495173 - SIPASKARAN, S., 10508379 - SIVAKANTHY, S., 10484873 - SIVAKUMARAN,T., 10489654 - SRILEKKA, P., 10496762 - SUGANTHAN, S., 10488142 - UMATHEVI, V., 10497601 - VIJAYALUXY, R., 10506091 - AKALYA, E., 10503861 - AMUTHINI, K., 10498118 - ANTONYRAJAN, M.T., 10497632 - ARULANANTHAM, J., 10519214 - GOVARATHANAN, N., 10498442 - JEYADEVAN, V., 10521495 - KALAIVANI, S.,10527973 - KETHEESWARAN, S., 10502896 - KETHEESWARAN, V., 10490773 -MANIVARMAN, V., 10499391 -MATHMANATHAN, V., 10503371 -MUGUNTHAN, S., 10506472 - PRASHANTHAN, M., 10521524 - PREMINI, S., 10519046 - RENUKA, R.,10493891 - ROGECIAN, S., 10525881 - SAHITHAN, R.,10514632 - SASIKARAN, S., 10510540 - SHATHEESAN, S., 10506867 -SIVACHSELVAN, S., 10497447 - SUREN, K.,10524932 - SUTHAKARAN, K.S., 10511423 - THARINI, S., 10520287 - THARSHINI, T., 10493689 - THEVAKI, T., 10505481 - ABIRAMI,M., 10517977 - AGALYAA, P., 10507511 -AHALYA,P., 10510141 - AJEETHKUMAR, A., 10488096 - AMBIGAIPAKAN, K., 10506550 - AMPIGAIPAGAN, T., 10498868 - ANANTHAGOBAN, K., 10502376 - ANTANITTA ROMALA, A., 10505662 - ARAVINTHAN, S.,10496378 - ARULALAN, A., 10507998 - ARURAN, P., 10515382 - ATHEESAN, P., 10512216 - ATHESAYAMALAR, C.V., 10502007 - BALASORUBY, G., 10490361 -BASKARARAVIVARMAN, S., 10511698 - CALISTRUS,M.J., 10490267 - CHANDRARUBAN, S., 10502359 - COLLIN, A., 10507311 - DHARSHINI, S.,10513134 -GEETHAIAMUTHAN, S., 10502942 -GNANAPPALAM, A., 10500941 - GOWSALAYA, S. 10509361 - HARIHARAN, S., 10511073 - JASMIN JEBANITHY, K., 10496074 -JASOTHARAN, T., 10507723 - JEGAN, P.,10507130 - JEYANTHAN, J.,10510232 - KAMALATHASAN, N., 10504775 - KANDEEPAN, N., 10506043 -KARUNANANTHAN,S.

10526552 -KASTHURY, T., 10478911 - KAVIARASCY, K., 10492150 - KEETHAPONKALAN, P., 10490300 - KESAVAN, R., 10524890 - KODEESWARAN K., 10503095 - KOSALADEVI, N., 10507677 - LAVANYA, .,10489411 - LOHANATHAN, S., 10504120 - MAHENDIRAN, M.L., 10523711 -MAHILNAN, Y., 10526734 - MANCHULA, T., 10522595 - MATHAVAN, M., 10512935 -MATHIALAKAN, T., 10488048 - MATHIVATHANAA, V., 10511301 - MATHIYALAKAN, P., 10496819 - MOHANAKANGAN, T., 10502544 - MOHANANITHY, A., 10514478 - NALAYINI, N., 10509100 - NISHANTHA, P., 10491340 - NISHANTHINI, B., 10504667 - NITHIANANDARAJAH, S., 10490986 - NITHLAVARNAN, A., 10496381 - NITHYA, B., 10508959 - PANNEERSELVAM, S., 10498611 - PARATHY, P., 10531747 - PATHMAN, I., 10482901 - PIRABAKARAMOORTHY, K., 10488800 - PONNUDURAI, R.,10509421 -PONTIVAKARAN, V.,10504008 - PRATHEEBAN, G.G., 10493770 - RAJASIVAM, K.,10507754 - SENTHILVEL, S., 10511008 - SENTHURAN, K., 10506455 - SENTHURAN, S., 10500574 - SHANMUGANATHAN, V., 10498533 - SHANTHIKUMAR, S., 10501612 - SHARSHAN, S., 10491779 - SITHRUBINI, K., 10491916 - SITKUMARAN, S., 10509560 -SIVACHELVAN, S., 10506819 - SIVAKANTHAN, S., 10521538 - SIVANANTHINI, K., 10522901 - SIVANUJAH, S., 10499587 - SIVASITHAMPARAM, R., 10511350 - SRITHARAN, M., 10492086 - SUTHARSARAJ, V., 10479337 - SUTHARSINI, S., 10511849 - SWARNAM, S., 10492471 -THANIKAIKUMARAN, N., 10499894 -THAVAKUMARAN, K.

10504897 - THAYAPARAN, P., 10490145 - THILEEBAN, V.,10513208 - THILLAISELVAN, T., 10512952 - THUSYANTHAN, K., 10508491 - UBENTHIRAN, G., 10497402 - VASANTHAMARAN, K., 10507004 - VASUKI, T., 10513211 - VATHANI, T., 10487501 - VIJAYAGOWRY,L., 10487501 - VIJAYAGOWRY,L., 10491094 - IKNESWARAN, S., 10502621 -VIKNESWARAN, S., 10488450 - VISAKAN, T., 10502011 - VITHIYARUBA, R., 10482886 - WILSON, E.G.V., 10490085 -YAMINI, S., 10511821 - YASOTHARAN, K., 10509022 - YOHALAKSHMY, S.,10503584 -BAHEERATHY, T., 10535480 - BALARUBAN, M., 10527241 - CHRISHANTHY, J.C.S., 10492618 - HAMSAYINI, S., 10510766 -JAYAKANTHAN, N., 10517321 - JEYANTHIRABALA, M., 10502848 -JEYASUGITHTHAN, J., 10490955 - JUSTIN JUDE, P., 10495601 - KANESWARY, T., 10497420 - KUGATHAS, R., 10507971 - KUKAN, S., 10521478 - KULALI, S., 10512494 - MALINI, R., 10512541 - MOHANAMBIHAI, K., 10523850 - MUHUNTHAN, T., 10522288 -NITHIYAKALA, K., 10495921 - PRATHEBAN, S., 10492925 - RAJENDRAN,M., 10505645 -SATHIYANARAYANAN, S., 10508 121 - SATHIYASEELAN, T., 10512446 -SELVAN ANTHARAJAH, N., 10521248 - SELVARANJAN, S., 10500313 - SENTHAN, A.

10503250 - SHARMILA, S., 10492467 - SIVAAKARAN, V., 10507615 -SIVAGNANAVATHY, P., 10492285 -SIVAKUMAR, T., 10492834 - SIVANTHINI, A., 10491367 - SRISETHUPARAN, S., 10494957 - SRISKANDARAJAH, S., 10517198 - UBASHINI, V., 10505341 - SUGIRTHAN, T., 10492589 - SUMITHIRA, K., 10506320 -THAMILCHELVAN, N., 10496581 -THANANJEYAN, R., 10497416 -THANENTHRAN, S., 10519123 -THURAISINGARAJA, A., 10489455 -THUSHEETA, S., 10489701 - VANIMUHUNTHAN, K., 10518271 - VASANTHAN, K., 10504713 - VIJAYATHEEPAN, R., 10516330 - VISHNUDEVI, R., 10502072 - YINOTHA, S., 10501489 - ARUNASALAM, A., 10507203 - JEGATHESWARAN, R., 10500054 - MATHINY, S.,10898610 - PRATHAP, T., 10898610 -PRATHAP, T., 10508152 - SAKTHIVEL, S., 10493445 - SELVAKKUMAR, S., 10491964 - SHARMILA, B., 10503692 - SIVANESAN, T., 10509071 - SUBEESKARNA, R., 10502670 - VALARMATHY, P., 10489515 - VALARMATHY, T., 10490449 - VANITHA, A., 10506714 - VASUKI,S.

(15ஆம் பக்கம் பார்க்க)

# மாவைக் கந்தன் ஆலயத்தில் நாளை காலை ரதோற்சவம்

## ஆலயத்துக்குச் செல்லும் பக்தர்களுக்கு வசதிகள்

யாழ்ப்பாணம்,ஓக.2

சரித்திரப் பிரசித்திபெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் ரதோற்சவம் நாளை புதன்கிழமை நடைபெறவிருக்கின்றது.

இந்த உற்சவத்தில் கலந்துகொள்ள விருக்கும் பக்தர்களுக்குத் தேவையான வசதி களை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள் ளன என இராணுவத்தரப்புத் தெரிவித்துள்ளது.

நாளை காலை 7.30 மணிக்கு ஸ்நபன அபிஷேகம் நடைபெற்று ஷண்முகப் பெரு மானுக்கு விசேட பூசைகள், ஆராதனைகள் இடம்பெறும்.

முற்பகல் 11.15 மணிக்கு ரத பவனி ஆரம்பமாகும். வழமைபோல் வீதியில் மண் டபப்படி இடம்பெறும்.

ஆலயத்தில் கூடும் பக்தர்களுக்கு தாக சாந்தி, அன்னதானம் வழங்க விசேட ஏற் பாடுகளை ஆலய நிர்வாகத்தினர் செய்துள் ளனர்.

தெல்லிப்பழை சுகாதார சேவைப் பிரிவி னர், சென்.ஜோன்ஸ் அம்புலன்ஸ் படைப்பிரி வினர் பக்தர்களுக்கு வேண்டிய உதவிகளை வழங்குவர். ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் தெல்லிப்பழையில் உள்ள தடை முகாமில் வைத்து உடற்சோதனை மற்றும் ஆளடை யாளச் சோதனை முடிவடைந்த பின்னர் போக்குவரத்துச் சபை பஸ் மூலம் ஆலயத் துக்கு அழைத்துச் செல்லப்படுவர் என்றும் -

தனியார் வாகனங்களில் வரும் பக்தர்கள் சோதனை முடிந்தபின் நேரடியாக வாகனத் திலேயே ஆலயத்துக்குச் செல்ல அனுமதிக் கப்படுவர் என்றும் -

யாழ். மாவட்ட சிவில் நிர்வாக அதிகாரி பிரிகேடியர் ரத்நாயக்க தெரிவித்தார்.

மோட்டார் சைக்கிள் மற்றும் சைக்கிள் களில் பக்தர்கள் ஆலயம் செல்ல அனுமதிக் கப்படமாட்டார்கள் என்றும் -

அவற்றை சோதனை நிலையத்துக்குச் சமீ பமாக வைத்துப் பாதுகாக்கும் பணியில் தெல் லிப்பழை யூனியன் கல்லூரி மாணவர்கள் ஈடுபடுத்தப்படுவர் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.

மறுநாள் கீரிமலையில் நடைபெறும் ஆடி அமாவாசை உற்சவத்தில் கலந்துகொள்ளும் பக்தர்கள் தெல்லிப்பழை, சேந்தாங்குளம் ஆகிய சோதனை நிலையங்கள் ஊடாகச் செல்ல அனுமதிக்கப்படுவர் என்றும் அவர் கூறினார். (எ-3-152)

## பரீட்சை அனுமதி அட்டை அனுப்பிவைப்பு

தென்மராட்சி ஓக.2

இணைந்த சேவைகள் தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான பதவியுயர்வுப் போட்டிப் பரீட்சைக்கான அனுமதி அட்டை கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தி னால் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பொது எழுதுநர் சேவை, களஞ்சியக் காப்பாளர் சேவை, தட்டெழுத்தாளர் சேவை ஆகியவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர் களுக்கு போட்டிப் பரீட்சை நடத்தப்படவுள் ளது.

எதிர்வரும் ஆறாந் திகதி யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் பரீட்சை நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-117)

# புலிகள் ஆயுதங்களைக் களைந்தால் மட்டுமே நாட்டில் சமாதானமாம்

## இப்படிக் கூறுகிறார் அமைச்சர் கதிர்காமர்

கொழும்பு,ஓக.2

தமிழீழ விடுதலைப் புலிகள் தமது ஆயு தங்களைக் களைந்து மக்கள் அமைப்பாக மாறினால் மட்டுமே இந்த நாட்டில் சமா தானம் ஏற்படும்.

- இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கூறினார்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவின் சுயசரிதை புத்தக வெளி யீட்டுவிழா கடந்த வெள்ளிக்கிழமை விசும் பாயாவில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய போது அவர் மேலும் தெரிவித் ததாவது:-

1994ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஜனாதி பதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங் கவின் ஆட்சியில்தான் சிறுபான்மை இன மக்களிற்கு சமாதானத்தின் மீது நம்பிக்கை ஏற்பட்டது.

ஜனாதிபதி கடந்த பல காலங்களாக குண் டுச் சத்தங்களிற்கும் தோட்டாச் சத்தங்களிற் கும் மத்தியில் சமாதானத்தின்மீது உறுதி யான நம்பிக்கையை வெளிப்படுத்தியவர். ஜனநாயக பன்முகத் தன்மையில் நம்பிக்கை யுடைய ஜனாதிபதி, சமாதானத்திற்கான போராட்டத்தை இன்றும் முன்னெடுத்துச் செல்கின்றார். இதனால், இலங்கை அரசியல் வரலாற்றில் அவர் ஒரு சரித்திரமாகப் பரிண மித்துள்ளார்.

'ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவும் இலங்கையில் அவருடைய தலைமைத்துவமும்' என்னும் தலைப்பில் இங்கிலாந்தைச் சேர்ந்த எழுத்தாளர் கிரஹம் வில்சன் எழுதியுள்ள இந்தச் சுயசரிதை நூல் வரலாற்றின் மைல்கல்லாகத்திகழும்.

இலங்கை ஆயுதப் போராட்டங்களுக்கும் ஐரிஸ் குடியரசுப்படையின் போராட்டத்திற் கும் பல ஒற்றுமை வேற்றுமைகள் உள்ளன.

இலங்கை ஆயுதப் போராட்ட வரலாற் றிலும் பார்க்க நீண்ட நெடிய வரலாற்றைக் கொண்டது ஐரிஸ் போராளிகள் வரலாறு. இவர்கள் தமது ஆயுதங்களைக் களைந்தது போன்று தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது ஆயுதங்களைக் களைந்தால்தான் சமா தானம் ஏற்படும் - என்றார். (எ-204)

## 6ஆயிரத்து 401 பேருக்கு சமுர்த்தி முத்திரைகள்

தென்மராட்சி,ஓக.2

தென்மராட்சிப் பிரதேசத்தில் சமுர்த்தி முத்திரைகள் பெறுவதற்கு 6ஆயிரத்து 401 பேர் தகுதிபெற்றுள்ளனர்.

இவர்களுக்கான சமுர்த்தி முத்திரைகள் தென்மராட்சிப் பிரதேச செயலகத்திற்குக் கொண்டுவரப்பட்டு பதிவுகள் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

விரைவில் அந்தந்தப் பிரிவு கிராம அலு வலர் ஊடாக இவை வழங்கப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது.

259 ரூபா, 350 ரூபா, 600 ரூபா, ஆயிரம் ரூபா ஆகிய பெறுமதியான முத்திரைகளே இவ் வாறு விநியோகிக்கப்படவுள்ளன. (எ-117)

## சாவகச்சேரி கிளையிலும் ஆண்டு நிறைவு நிகழ்வு

தென்மராட்சி,ஓக.2

இலங்கை வங்கியின் 66ஆவது ஆண்டு நினைவு நாள் நிகழ்வுகள் நேற்று சாவகச்சேரி இலங்கை வங்கிக் கிளையிலும் நடைபெற்றன.

கிளை முகாமையாளர் க.இராஜகோபால் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் சிவஸ்ரீ சி.சிதம்பரநாதக்குருக்களின் ஆசியு ரையும் டாக்டர் எஸ்.எஸ். அருளானந்தத் தின் வாழ்த்துரையும் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் வங்கியின் வாடிக்கை யாளர் பலர் கலந்துகொண்டனர். (எ-117)




கோண்டாவில் சிவபூமி பாடசாலையின் முதலாவது ஆண்டு நிறைவு விழா நேற்றுப் பிற்பகல் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

சிவபூமி அறக்கட்டளைத் தலைவர் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் மற்றும் லண்டனில் இருந்து வருகைதந்த பாலசிங்கம் மற்றும் ஜெயசீலன் தம்பதியினரை முதலாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்டோரில் ஒரு பகுதியினரை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள்: பிரபா)

### மகாராஷ்ட்ரா மாநில வெள்ளத்தினால்

# இரண்டு கோடி மக்களுக்குப் பாதிப்பு 100 கோடி அமெ.டொலர்கள் சேதம்!

இந்திய மகாராஷ்ட்ரா மாநிலத்தில் பெய்து வரும் அடை மழை காரணமாக மும்பாய் மற் றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள 2 கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என இந்திய அதிகாரிகள் கூறியுள்ளனர்.

நகர் முழுவதிலும் ஏற்பட்டுள்ள சேதங் கள் மட்டும் 100 கோடி அமெரிக்க டொலர் களை விடவும் அதிகமாகும் என்று தெரிவிக் கப்படுகிறது.

நகரின் போக்குவரத்துகள் முடங்கிய நிலையில் காணப்படுகின்றன. உள்ளூர் மற் றும் வெளியூர் போக்குவரத்து முற்றாகத் தடைப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படு கிறது.

இந்திய மும்பாய் நகரம் மழையால் மீண் டும் ஸ்தம்பித்துள்ளது. தண்டவாளங்கள் நீரில் மூழ்கின. மக்கள் வீடுகளை விட்டு வெளி யேற அரசு தடை விதித்துள்ளது.

மழை வெள்ளத்தின் கோரப்பிடியிலிருந்து லேசாக மீண்டும் எழுந்த மும்பை மற்றும் மராட்டியத்தின் பல்வேறு இடங்களில் நேற்றுமுன்தினம் மீண்டும் பலத்த மழை பெய்தது. மீண்டும் மழை தொடங்கியிருப் பதைத் தொடர்ந்து மும்பாய் நகரவாசிகள் யாரும் வாகனங்களை வெளியில் எடுத்து வரவேண்டாம் என மும்பாய் பொலீஸ் அதி காரி ஏ.என்.ராய் எச்சரித்துள்ளார். அவசர தேவை என்றால் மட்டுமே வெளியில் வாருங் கள். வீண் வதந்திகளை நம்பாதீர்கள் என்று அவர் கேட்டுள்ளார். மும்பாயில் மீண்டும் வெள்ளப்பெருக்கு ஏற் படலாம் என்பதால் அனைத்து அதிகாரி களும் தயார் நிலையில் இருக்கும்படி முதல் வர் உத்தரவு பிறப்பித் துள்ளார். இராணுவத் தின் உதவியையும் அவர் வேண்டியுள் ளார்.

நேற்றுமுன்தினம் பெய்த மழையினால் மும்பை நகரில் குர்லா மல்லாட் அந்தேரி பகுதிகளில் புறநகர் ரயில் தண்டவாளங்கள் நீரில் மூழ்கின. இதையடுத்து புறநகர் ரயில் போக்குவரத்து அங்கு நிறுத்தப்பட்டுள்ளது. மராட்டியத்தின் இதர பகுதிகளிலும் நேற்று கடுமையான மழை பெய்தது.

மோசமான வானிலை காரணமாக மும் பாய் விமானப் போக்குவரத்துத் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு பின்னர் மீண்டும் விமானங் கள் இயக்கப்பட்டன.

மும்பை மற்றும் மராட்டியத்தில் இது வரை மழை வெள்ளத்துக்கு 800 பேர் பலி யானதாக நம்பப்படு கிறது. பலரது உடல் கள் இன்னும் கிடைக்க வில்லை. எனவே, இந்த எண்ணிக்கை ஆயிரத்தைத் தாண் டலாம் என்று அதிகா ரிகள் கருதுகிறார்கள்.

நிலைமை இவ் வாறிருக்க, மும்பை உட்பட மராட்டியத்தில் அடுத்த 48 மணி நேரத்துக்கு மழை நீடிக்கும் என வானிலை நிலையம் அறிவித்துள்ளது. இதனால் அங்கு பெரும் பீதி ஏற்பட்டுள்ளது. (எ-க)

உலக அரங்கில்

## சூடான் உதவி ஜனாதிபதி விமான விபத்தில் மரணம்!

சூடான் உதவி ஜனாதிபதியும் முன்னாள் தீவிரவாத இயக்கத் தலைவருமான ஜோன் காரங் விமான விபத்தில் பலியானார் என ஐ.நா. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை உகண்டாவில் இருந்து ஜோன் காரங் ஹெலிகொப்டரில் சூடானுக்கு வந்துகொண்டிருந்தபோது அவ ரது தொடர்பு துண்டிக்கப்பட்டது. அதன் பின் இராணுவத்தினர் தேடுதல் நடத்தியபோதே அவர் வந்த ஹெலிகொப்டர் விபத்துக்குள் ளானது தெரியவந்தது என்று தெரிவிக்கப் படுகின்றது.

30 வருடங்களாக சூடானில் நிலவிய உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதில் பெரும் பங்காற்றியவர் அவர். அவரது மரணம் ஒரு பேரிழப்பு என்று அவ தானிகள் தெரிவித்துள்ளனர். சூடான் மக்கள் விடுதலை இராணுவத்தின் முன்னாள் தலை வரான அவர், நைரோபியில் கூட்டமொன்றுக்குச் சென்றுதிரும்பிய சந்தர்ப்பத்தில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

சூடான் அரசுக்கு எதிராக 21 வருடங்கள் வடக்கில் ஆயுதமேந் திப் போராடிய ஜோன், அதன்பின்னர் ஆயுதம் களைந்து அரசியலில் ஈடுபட்டார்.

அவரது சமாதான முயற்சிகள் வெற்றிய டைந்தபோது இதுவே சிறந்த வெற்றி, மிகப் பெரிய வெற்றி என சந் தோஷம் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் சூடான் உள்நாட் டுக் கலவரம் முடிவுக்கு வந்தது. அதன் பின் னர் அவர் புதிய அரசில் உதவி ஜனாதிபதி யாகப் பதவியேற்றார். (எ-க)



## கொழும்பிலிருந்து வத்தளை சென்றவரைக் காணவில்லையென யாழில் .முறைப்பாடு

கொழும்பிலிருந்து வத்தளை கொழும்பு நகருக்குச் சென்ற ஒருவரைக் காணவில்லையெனத் தெரிவித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பலாகல றோட், கெந்தல வத்தளையைச் சேர்ந்த முருகேசு ரமேஷ் (வயது 38) என்பவரே காணாமற்போனவராவார்.

மேற்படி நபர் கடந்த 17ஆம் திகதி வீட்டிலிருந்து கொழும்பு செல்வதாகக் கூறிவிட்டு வெளியில் சென்றார் என்றும் -

அதன்பின்னர் அவர் வீடு திரும்பவில்லையென்றும் - முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகம் கொழும்புத் தலைமையகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளது.

இவர் தொடர்பான தகவல் தெரிந்தவர்கள் மனித உரிமைகள் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளமுடியும். மனித உரிமைகள் ஆணைக்குழுவின் காணாமற்போனோர் விசாரணை அதிகாரி ரி.மொறின் கேட்டுள்ளார். (எ-7)

## தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்குச் செல்ல படையினர் புதிய பாதை அமைப்பு

உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலைக்குச் செல்வதற்கு புதியபாதை அமைக்கும் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டுவருகின்றனர்.

தெல்லிப்பழை மாவட்ட வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு மட்டும் கடந்த மாதம் முதல் உயர்பாதுகாப்பு வலயத்தில் அமைந்துள்ள சொந்தக் கட்டடத்தில் இயங்குவதுடன் உளநலப் பிரிவும் அங்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நோயாளர்கள் சிகிச்சை பெறுவதற்கு வசதியாக போக்குவரத்தை சுதந்திரமாகச் செய்வதற்கு அனுமதிக்கப்படவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் பிரதான வீதி இருக்கக்கூடியதாக அதனைவிடுத்து பொதுமக்களுடைய காணிகள் ஊடாக கட்டடங்கள், மதில்களை இடித்து புதிய பாதையொன்றை அமைக்கும் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. (எ-86)


உ

அனலைதீவு ஐயனார் ஆலய பரிபாலன சபையினரின்

### முக்கிய அறிவித்தல்

கடந்த 27.07.2005 புதன்கிழமை மாலை 6.30 மணிக்கு கொழும்பிலிருந்து ஒலிபரப்பாகிய வானொலி ஒன்றின் செய்தி நிகழ்ச்சியில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

அவர்கள் ஆலயத்துக்கு நிதி வழங்கியதாகவும் அந்த நிதியை ஆலய நிர்வாக செயலாளரிடம் தமிழீழ விடுதலைப் புலிகள் பலாத்காரமாகப் பெற்றுக் கொண்டார்கள் என்றும், இதனால் மக்கள் விசனமடைந்து இருப்பதாகவும் அறிவித்தார்கள்.

இச்செய்தி ஒரு தவறான செய்தி என்பதனையும் ஆலயத்துக்கு நிதி வழங்கப்படவில்லை என்பதனையும் இப் பொய்யான செய்தி மூலம் மக்களுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் முரண்பாடுகளை ஏற்படுத்தவே இது ஒலிபரப்பப்பட்டுள்ளது என்பதையும் நாம் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஆலய பரிபாலன சபையினர்
அருள்மிகு ஐயனார் ஆலயம்.

அனலைதீவு.
01.08.2005

(38437)(21-34-13)



## GIT வழிகாட்டி

*மாணவர்களே நீங்கள் தயாரா?*
*நாங்கள் உங்களைத் தயாராக்குகின்றோம்!*

G.C.E. (A/L) 2006 மாணவர்களுக்கான அரசாங்க இறுதிப் பரீட்சை இவ்வருடம் Aug. 21 ஆம் திகதி

GIT இற்கான முழுமையான 11 புத்தகங்கள்

- Fundamentals of IT
- Mathematics For Computing
- Information System and IT
- Computer Programming
- Windows Basics
- Ms Word
- Ms Excel
- Ms Powerpoint
- Ms Access
- Internet and Email
- IT and National Development +
- 3 Model Papers
- 1 Short cut Key Pad

பாடசாலை ஊடாகப் பெறவிரும்புவோர் தொடர்புகொண்டால் பாடசாலைகளுக்கு விநியோகிக்கப்படும்.

(C/44224)(42-13-19)

தொடர்புகளுக்கு:
**Dream Solutions (Pvt)Ltd,** நிலவு.com
140, Navalar Road, Jaffna. T.P.: 0714 801391
275, Jaffna Road, Manipay. T.P.: 0777 740413



## 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**செல்லையா சண்முகநாதன்**
*(ஆசிரியர், இணுவில் இந்துக் கல்லூரி)*

தோற்றம் 27-07-1943
மறைவு 25-07-1995

திதி : திரயோதசி (பிரதோஷம்)

அப்பா!
ஆயிரமாயிரம் உறவு இருந்தென்ன
உங்கள் உறவில்லையே எமக்கு?
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

'வள்ளுவர் இல்லம்',
இணுவில் மேற்கு,
இணுவில்.

உங்கள் அன்பு மனைவி,
மகன், மகள், குடும்பத்தினர்.

(38438)(32-21-34-13)


## நடமாடும் விஞ்ஞான ஆய்வுகூட சேவை

தென்மராட்சி,ஓக.2

தென்மராட்சி கல்வி வலயத்தினர் இரண்டாம் தவணை விடுமுறைக் காலத்தில் நடமாடும் விஞ்ஞான ஆய்வுகூட சேவையினை நடத்தவுள்ளனர்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள ஜி.சீ.ஈ.சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் விஞ்ஞான பாட அடைவினை உயர்த்தும் நோக்குடன் அவசியமான பரிசோதனைகள் மாணவர்களுக்குச் செய்து காண்பிக்கப்படவுள்ளன.

பின்வரும் தினங்களில் நடத்தப்படும் நடமாடும் ஆய்வுகூட சேவைகளில் தரம் பதினொன்றில் கற்கும் சகல மாணவர்களையும், கலந்துகொள்ளுமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி றெஜினா இருதயநாதன் கேட்டுள்ளார்.

நடமாடும் ஆய்வுகூட சேவை நடைபெறும் தினங்களும், பாடசாலைகளும் பற்றிய விவரங்கள் வருமாறு:

* நாளை புதன்கிழமை வரணி மகா வித்தியாலயம்.
* எதிர்வரும் எட்டாம் திகதி திங்கட்கிழமை கைதடி முத்துக் குமாரசாமி மகா வித்தியாலயம்.
* பத்தாம் திகதி புதன்கிழமை கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்.
* 15ஆம் திகதி திங்கட்கிழமை சாவகச்சேரி மகளிர் கல்லூரி.
* 18 ஆம் திகதி புதன்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
* 22 ஆம் திகதி திங்கட்கிழமை மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலம் ஆகியவற்றில் நடைபெறும். (எ-117)

## ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியர்கள் கேடயம் வழங்கிக் கௌரவிப்பு

வலி.தெற்கு, ஓக.2

இணுவில் மத்திய கல்லூரியில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற பவளவிழாவின் போது கடந்த 75 ஆண்டுகளில் இந்துக் கல்லூரியில் கல்விப் பணியாற்றி ஓய்வுபெற்ற மூன்று அதிபர்கள் உட்பட 38 ஆசிரிய ஆசிரியைகள் பவளவிழாச் சபையினரால் பொன்னாடை போர்த்தி, நினைவுக்கேடயம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

கல்லூரி அதிபர் துரை எங்கரசு தலைமையில் பவளவிழா நிகழ்ச்சிகள் ஆரம்பமான போது இந்த அதிபர்கள், ஆசிரியர்கள் அனைவரும் கல்லூரி ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்களால் மலர்மாலைகள் அணிவித்து இணுவில் சிவன் ஆலயத்தில் இருந்து கல்லூரி ஆரம்ப பிரிவு மண்டபத்துக்கு மங்கள வாத்திய சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

கல்லூரி பழைய மாணவர் சங்க செயலாளர் ந.தவசோதிநாதனின் வரவேற்புரையைத் தொடர்ந்து நல்லை ஆதீன முதல்வர், இணுவில் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

விழாவில் தற்போது கல்லூரியில் கடமையாற்றிவரும் அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் பவள விழாக் கேடயங்கள் வழங்கப்பட்டன.

நல்லை ஆதீன முதல்வர் சிவஸ்ரீ தா. மகாதேவக் குருக்கள், மாவட்ட நீதிபதி திருமதி சரோஜினி இளங்கோவன், பிரதிக்கல்விப் பணிப்பாளர் சண்முகநாதன், பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் பெ. கனகசபாபதி, செ. நடராசா, வை.லோகநாதன் ஆகியோரால் பொன்னாடைகளும் வெற்றிக் கேடயங்களும் வழங்கப்பட்டன.

கல்லூரி சரஸ்வதி கலையரங்கில் மாலை நிகழ்வாக கலைநிகழ்ச்சிகள் பல நடைபெற்றன. (எ-152)

## காணி நிர்வாகம் கு[illegible]த்த கூட்டம்


தென்மராட்சி,ஓக.2

யாழ்.மாவட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கான காணி நிர்வாகம் தொடர்பான நடைமுறைப் பயிற்சிக் கருத்தரங்கு யாழ். செயலக கேட்போர் கூடத்தில் எதிர்வரும் 4ஆம், 5ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், காணி உத்தியோகத்தர், குடியேற்ற உத்தியோகத்தர், வெளிக்களப் போதனாசிரியர், காணிக்கிளை எழுதுநர் ஆகியோரை மாகாணக் காணி ஆணையாளர் இ.இரவீந்திரன் கேட்டுள்ளார். (3-117)


## 31ஆம் நாள் நினைவு அஞ்சலி

அன்னையின் மடியில் 09 - 11 - 1942



இறைவன் அடியில் 03 - 07 - 2005

**அமரர் காசியர் செல்வரட்ணம்**
(மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய்)

அன்பும் பாசமும் நிறைந்த எங்கள் அப்பா!
உங்களை நினைந்து நினைந்து உருகுகின்றோம்
சொல்லாமல் கொள்ளாமல் எங்குதான்
சென்றீர்கள் அப்பா?
உங்கள் பிரிவால் உடைந்து நொருங்கிய
சிற்பம் போல் நாம் வாழ்கின்றோம் அப்பா!
உங்கள் ஆத்மா சாந்தி அடையட்டும்.

மானிப்பாய் கிழக்கு,
மானிப்பாய்.

உங்கள் பிரிவால் வாடும்
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்
மருமக்கள்,பேரப்பிள்ளைகள்.


(38432)(21-34-13)



## மரண அறிவித்தல்

### விஜயரத்தினம் கணேஸ்வரன்

*(கந்தசாமி - நொயிஸ் அண்ணை)*



கைதடிதெற்கைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட விஜயரத்தினம் கணேஸ்வரன் அவர்கள் 28.07.2005 வியாழக்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் இறைபதமடைந்த விஜயரத்தினம் - சிவபாக்கியம் தம்பதிகளின் அருமைப் புத்திரனும் இறைபதமடைந்த சதாசிவம் - தங்கரத்தினம் தம்பதிகளின் அன்பு மருமகனும் நகுலேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் திருமதி இராஜேஸ்வரி பாலச்சந்திரன், அருந்ததி, பராசக்தி (இலிகிதர், யாழ்.பல்கலைக்கழகம்) ஆகியோரின் அருமைச் சகோதரனும் பாலச்சந்திரன் அவர்களின் அன்புமைத்துனரும் திருமதி திருமகள் சதானந்தன் (இத்தாலி), முகுந்தன் (பிரான்ஸ்), சயந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் சதானந்தன் (இத்தாலி) அவர்களின் சிறிய தந்தையாரும் உமேஷனின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2005) புதன்கிழமை ஜேர்மனியில் நடைபெறும். ஆகவே, அன்னாரது யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை, 11, ஒடை ஒழுங்கையிலுள்ள இல்லத்தில் அவரது நினைவாக மாலை 5 மணியளவில் துக்கம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*11, ஒடை ஒழுங்கை,*
*வண்ணார்பண்ணை,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்
பொ.பாலச்சந்திரன்
(மைத்துனர்).

(38441)(42)

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

## கதிர்காமரின் வேடிக்கைப் பேச்சு

''விடுதலைப் புலிகள் ஆயுதங்களை முற்றாகக் கையளிக்கும்வரை இலங்கையின் தேசியப் பிரச்சினைக்கு - இனப் பூசலுக்கு - நிரந்தரத் தீர்வு ஏற்படச் சாத்தியமேயில்லை'' - இப்படி புதிய கண்டுபிடிப்பு ஒன்றைக் கண்டுபிடித்தவர்போல திருவாய் மலர்ந்தருளியிருக்கிறார் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷமன் கதிர்காமர்.

தாம் ஒட்டியிருக்கும் பதவிக்கு - மக்களின் முன்செல்லாத அரசியல்வாதியான தமக்கு முக்கிய இடமளித்த தென்னிலங்கை அரசுக்கு - விசுவாசமாக அவர் நடந்துகொள்வது தப்பில்லை. 'நன்றி மறப்பது நன்றன்று' என்ற அவரது இயல்புக்கும் தமது எஜமானர்களுக்கும் அவர் காட்டும் விசுவாசத்துக்கும் பாராட்டுக்கள்!

ஆனால், அதற்காக இந்த இலங்கைத் தீவில் அவரது தமிழினம் சிறுபான்மை இனம் என்ற முறையில் அனுபவித்த - அனுபவிக்கின்ற - கொடூர அடக்குமுறைகள், இன்னல்கள், பாரபட்சங்கள் அடங்கிய கடந்தகால சரித்திரத்தைத் தமிழரான அவரே மறந்துவிட்டுப் பேசுவது அழகல்ல. அத்தகைய பௌத்த, சிங்களப் பேரினவாதத்தின் அடக்குமுறைக்கு அவரே துணைபுரிவது 'கோடரிக்காம்பு' வேலையேயன்றி வேறாக அர்த்தப்படக் கூடியதுமல்ல.

காலனித்துவவாதிகள் இலங்கையைக் கைப்பற்றும்வரை - ஐரோப்பியர் இத்தீவை ஆக்கிரமிக்க முன்னர் - தமிழர்கள் இங்கு தனியரசின் கீழ் தம்மைத் தாமே ஆண்டு வந்தனர் என்ற உண்மை புத்திஜீவிகள் வர்க்கத்தைச் சேர்ந்தவர் எனத் தம்மைக் கருதும் கதிர்காமருக்குத் தெரியாதிருந்திருக்காது.

இலங்கைத் தீவைக் கைப்பற்றிய ஐரோப்பியர்கள் - குறிப்பாக, ஆங்கிலேயர்கள் - 1833 இல் ஒற்றையாட்சியின் கீழ் இத்தீவைக் கொண்டுவந்தபோதே தமிழர் தாயகம் சிங்கள தேசத்தோடு இணைக்கப்பட்டது. 1948இல் ஆங்கிலேயர் ஆட்சி தீவகத்தில் முடிவுக்கு வந்தபோது தமிழ்பேசும் மக்களின் இறைமையைப் பெரும்பான்மையினரான சிங்களவரிடம் பிரித்தானியர்கள் ஒப்படைத்துச் சென்றனர். அதுவே இனச்சிக்கல் இன்று இவ்வளவு மோசமான - பூதாகர - நிலையை அடைந்ததற்கான அடிப்படை.

இவையெல்லாம் தமிழரான லக்ஷமன் கதிர்காமருக்கும் தெரியாத - புரியாத - மறந்துபோன - விடயங்கள் அல்ல.

இவ்வாறு முறையற்ற வகையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இறைமையை வைத்துக்கொண்டு பௌத்த, சிங்களப் பேரினவாதம் என்னவெல்லாம் செய்தது, என்னென்ன ஆட்டமெல்லாம் ஆடியது என்பது கடந்தகால உண்மைச் சரித்திரம்.

''நாடாளுமன்றப் பெரும்பான்மையைப் பயன்படுத்தி மிக அநாகரிகமான முறையில் தமிழினம் இத்தீவில் ஒடுக்கப்பட்டது. லட்சக்கணக்கான மலையக மக்களின் குடியுரிமையும் வாக்குரிமையையும் மிகக் கேவலமான முறையில் பறிக்கப்பட்டன. ஒரு தலைப்பட்சமான தனிச் சிங்களச் சட்டத்தினால் மொழி உரிமையும் வேலைவாய்ப்பு உரிமையும் பிடுங்கப்பட்டன. தரப்படுத்தல் நடவடிக்கை வாயிலாகக் கல்வி உரிமை மறுக்கப்பட்டது. பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசரகாலச் சட்டம் என்பன மூலம் முழு மனித உரிமைகளும் மிதிக்கப்பட்டன. திட்டமிடப்பட்ட பேரினவாதச் சிங்களக் குடியேற்றங்களைப் பயன்படுத்தித் தமிழர் தாயக மண் சூறையாடப்பட்டது. தமிழரின் குடித்தொகைப் பரம்பல் முற்றாகப் பாதிக்கப்பட்டது. இப்படியே தமிழரின் வாழ்வுரிமை பறிக்கப்பட்டதுதான் ஐந்து தசாப்த கால வரலாறு'' - என்பதை வவுனியாவில் அண்மையில் வெளியிடப்பட்ட எழுச்சிப் பிரகடனம் மூலம் தமிழினம் மீண்டும் வெளிப்படுத்தியிருக்கிறது. இவையும் கதிர்காமர் போன்றோருக்குத் தெரியாத விடயங்கள் அல்லவே?

வாழ்வாதார உரிமைகள் இப்படிப் பிடுங்கப்பட்டபோது சுமார் மூன்று தசாப்தகாலம் தங்கள் உரிமைகளுக்காக - இழந்த சுதந்திரத்தை மீட்பதற்காக- ஈழத் தமிழர்கள் அகிம்சை வழியில், சாத்வீக முறையில், காந்தீய நெறியில் போராடினார்கள். அந்தப் போராட்டங்கள் பெரும்பான்மை இனத்தினால் ஆயுதமுனையில் நசுக்கப்பட்டதும், பௌத்த - சிங்கள பேரினவாதத்தை நிலை நிறுத்தும் அரசமைப்புச் சட்டங்கள் போன்றவை வலிந்து தமிழர்கள் மீது திணிக்கப்பட்டதுமே கடந்த காலத்தின் கசப்பான அனுபவங்கள். அவையும் கூட கதிர்காமர் போன்றோருக்குத் தெரியாமல் - புரியாமல் - போன விடயங்கள் அல்ல.

இந்தப் பின்னணியில்தான் இழந்த தமது உரிமைகளை -இறைமையை - சுதந்திரத்தை - மீட்பதற்கான தமது தேசிய விடுதலைப் போராட்டத்தை ஆயுதம் தாங்கிய வழியில் முன்னெடுக்கத் தமிழர்கள் தலைப்பட்டார்கள்; நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

தமிழரின் அந்த ஆயுதப் போராட்டத்தின் எழுச்சியாகவே இன்று விடுதலைப் புலிகள் இயக்கம் கிளர்ந்தெழுந்து விஸ்வரூபம் எடுத்து நிற்கிறது.

இந்த விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னரும் கூட சிங்களப் பெரும்பான்மையினரால் தமிழர்கள் மிகமிக மோசமாக அடக்கப்பட்டனர். அதிலும் அழிக்கப்பட்டனர் என்று கூறுவதே சாலப்பொருத்தமானதாகும்.


இராணுவ நடவடிக்கை என்ற பெயரில் நில ஆக்கிரமிப்பு தொடர்ந்தது. தமிழ் மக்களின் வாழ்வாதாரங்களாக இருந்த தாயக மண் அரச படைகளினால் கபளீகரம் செய்யப்பட்டு ஆக்கிரமிக்கப்பட்டது. தாயகக் கடல் இறங்க முடியாததாயிற்று. குண்டு வீச்சுகள், எறிகணை வீச்சுகள் என்று தமிழர்கள் பல்லாயிரக்கணக்கில் வகை தொகையின்றிக் கொன்றொழிக்கப்பட்டனர். பாடசாலைகளின் மீதும், மக்கள் குடியிருப்புகள், வழிபாட்டுத் தலங்கள், பொது இடங்கள் போன்றவை மீதும் நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதல்களால் பச்சிளம் பாலகர்கள் முதல் வயோதிபர்கள் வரை - வயது வேறுபாடின்றி- படுகொலையுண்டனர்.

இவ்வளவு கொடூரங்களையும் - பயங்கரவாதங்களையும் - 'அரசு' என்ற முகத்திரையை வைத்துக்கொண்டு தனது சட்டங்கள் ரீதியாகவும், சட்டமுறையற்ற விதத்திலும் புரிந்த தென்னிலங்கை அரசின் பிரதிநிதியாக நின்றுகொண்டு கதிர்காமர் இப்போது இப்படித் 'தத்துவம்' பேசுகிறார்.

'போர் என்றால் போர்; சமாதானம் என்றால் சமாதானம்' என்று பிரகடனப்படுத்திய சிங்களம் இன்று 'சமாதானம்' , 'அமைதிப் பேச்சு', 'நிரந்தரத் தீர்வு', 'இணக்கத்துடன் கூடிய சுமுகநிலை' பற்றியெல்லாம் அதிகம் பேசுவதும், கரிசனை காட்டுவதும், அவற்றுக்காகத் துடிப்பதும் எதனால்?

தமிழர்களின் பாதுகாப்புக் கவச அங்கியாகவும், பலமாகவும், அரணாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற மரபு வழிப்படையணி அவர்களைத் தலைமை தாங்கி வழிப்படுத்துவதுதான் அதற்கு ஒரே காரணம்.

அடக்கப்பட்டு, ஒடுக்கப்பட்ட ஓர் இனத்துக்கு நிரந்தர- நிலையான- தமிழர்களின் நியாயமான அபிலாஷைகளை நிறைவு செய்யக்கூடிய - தீர்வு ஒன்று கிட்ட முன்னர், அவர்களின் பாதுகாப்பு அரணை உடைக்கவேண்டும் என்று கோருகிறார் கதிர்காமர். அதுவும் நியாயத் தீர்வைத் தருவோம், தருவோம் என்று கூறியே தமிழினத்தை ஏமாற்றிவரும் அரசின் பிரதிநிதியாக நின்றுகொண்டு அவர் இப்படிக் கூறுகின்றார். இது வேடிக்கையன்றி வேறென்ன?



இலங்கை வங்கியின் 66ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.மேற்றரக்கிளையில் நேற்றுக்காலை நடைபெற்ற நிகழ்வின் போது எடுக்கப்பட்ட படங்கள். யாழ்.மேற்றரக்கிளையின் பிரதான முகாமையாளர் எஸ்.விக்னராஜா உரையாற்றுவதையும்-

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், வண.பிதா அருமைநாயகம், இலங்கை வங்கியின் வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ஏ.அருமைநாயகம், சென்பற்றிக்ஸ் கல்லூரி ஆசிரியர் பொன்சிகன், பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, ஓய்வுபெற்ற நீதிபதி மு.திருநாவுக்கரசு ஆகியோரையும் படங்களில் காணலாம். *(படங்கள்: பிரபா)*

# யாழ்.வருவோர் தமது வெளிநாட்டு வங்கிக் கணக்கிலிருந்து இங்கே பணம்பெற புதிய நடைமுறை அறிமுகம்

## இலங்கை வங்கி மேற்றரக் கிளை முகாமையாளர் தகவல்

யாழ்ப்பாணம், ஒக.2

வெளிநாட்டில் இருந்து யாழ்ப்பாணம் வருவோர் தத்தமது நாடுகளில் உள்ள தமது வங்கிக் கணக்கில் இருந்து பணம் பெறுவதற்கான புதிய நடைமுறை ஒன்று கடந்தவாரம் அமுலுக்கு வந்துள்ளது.

- இப்படிக் கூறினார் இலங்கை வங்கியின் மேற்றரக் கிளை முகாமையாளர் எஸ்.விக்னராஜா.

இலங்கை வங்கியின் 66ஆவது ஆண்டு நிறைவையொட்டி மேற்றரக் கிளையில் நேற்றுக்காலை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்வில் உரையாற்றுகையில், அவர் இத்தகவலை வெளியிட்டார்.

இந்நிகழ்வில் மதப்பிரமுகர்கள், வங்கி வாடிக்கையாளர்கள், கல்விமான்கள், பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள், வண.எஸ். செல்வராசா அடிகள் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்.

தொடர்ந்து உரையாற்றிய விக்னராஜா தமது உரையில்:-

தனியார் வங்கிகள் பிந்திய தொழில்நுட்ப வசதிகளைப் புகுத்தித் தமது சேவையை விஸ்தரிக்கும் நிலையில், இலங்கை வங்கி குறைந்த வளத்துடன் மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்கி வருகின்றது.

இலங்கையில் உள்ள நூறு வங்கிக் கிளைகளுடன் யாழ்ப்பாணக் கிளையையும் இணைத்து உடனுக்குடன் மக்கள் தேவையைப் பூர்த்திசெய்து வருகின்றோம்.

வெளிநாட்டில் உள்ள ஒருவர் யாழ்ப்பாணம் வரும்போது தமது நாட்டில் உள்ள வங்கியில் உள்ள பணத்தை இங்குபெறக் கூடிய வசதி கடந்தவாரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமது கடன் அட்டைகளை வங்கியில் கொடுத்துப் பணம் பெறமுடியும் - என்றார் அவர்.

முன்னாள் நீதிவான் எம்.திருநாவுக்கரசு, யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளர் ஏ.அருமைநாயகம் ஆகியோரும் நிகழ்வில் உரையாற்றினர்.

(எ-3-7)

# தமிழ் பண்பாட்டு ஆடைகளுடன் நல்லூருக்கு வருகை தாருங்கள்!

## ஆணையாளர் குணராசா வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஒக.2

நல்லூர் ஆலய பெருந்திருவிழாவில் கலந்துகொள்வோர் தமிழ்க் கலாசாரத்தை பிரதிபலிக்கின்ற வகையில் ஆடைகளை அணிந்து வரவேண்டும்.

- இவ்வாறு கேட்டுள்ளார் யாழ். மாநகர ஆணையாளர் கலாநிதி க.குணராசா. இது விடயமாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நல்லூர் கந்தன் ஆலயத்தின் பெருந்திருவிழா எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகி அடுத்தமாதம் 5 ஆம் திகதி நிறைவடைகிறது.

நல்லூர் ஆலயச் சூழல் புனித பிரதேசமாகக் கருதப்படுகின்றது. எனவே, ஆலயத் திருவிழா நாள்களில் ஆலயத்திற்கு வருவோர் தமிழ் கலாசாரத்தைப் பிரதிபலிக்கின்ற வகையில் ஆடைகளை அணியவேண்டும். ஆலயத்தின் உள் வீதிக்குச் செல்லும் பெண்கள் சேலையும், ஆண்கள் வேட்டியும் அணிந்திருக்க வேண்டும்.

உற்சவ காலத்தில் வெளிவீதியில் நடமாடுவோர் காலணியுடன் நடமாடுவதைத் தவிர்த்தல்வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ-7)

# வழுக்கியாறு புனரமைப்பின் முதல் கட்டப்பணிகள் ஆரம்பம்

வலிகாமம்,ஒக.2

வழுக்கியாறு புனரமைப்பின் இவ்வருடப் பணிகள்உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நியாப் II திட்டத்தின் கீழ் கட்டுடை தொடக்கம் அராலி பராஜ் வரையான வழுக்கியாற்றுப்பகுதி இந்த வருடம் புனரமைக்கப்படவுள்ளது. இந்த புனரமைப்பு வேலைகளின் முதற்கட்டமாக கிராய்குளம் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

இந்த புனரமைப்பு வேலைகளை மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனம் பொறுப்பேற்று மேற்கொள்ளவுள்ளது.

கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மேற்படி குள புனரமைப்புப் பணிகளை யாழ். அரச அதிபர் கே.கணேஷ் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

விவசாய சம்மேளனம், புனரமைப்பு பணிகளில் ஈடுபடுவதற்கான அனுமதி வழங்கும் பத்திரத்தை அரச அதிபர் மேற்படி விவசாய சம்மேளனத் தலைவர் சி. பொ.வ.மா.க. முதலியாரிடம் கையளித்தார்.

கிராய்குள புனரமைப்புப் பணிகள் ஆரம்பமாவதற்கு முன்னதாக, கட்டுடை அரசடிப்பிள்ளையார் ஆலயத்தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றது. அரச அதிபர் உட்பட விவசாயத் திணைக்களம், நியாப் திட்டம் ஆகிவற்றைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் இதில் கலந்துகொண்டனர்.

நியாப் திட்ட பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கே.பாலகிருஷ்ணன், நீர்ப்பாசன திணைக்கள உதவிப் பொறியியலாளர் க.கருணாநிதி, நியாப் திட்ட வழுக்கியாறு புனரமைப்பு பொறுப்பதிகாரி ரி.கணேசராசா உட்பட நீர்ப்பாசன திணைக்களத்தைச் சேர்ந்த தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்தை சேர்ந்த பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலரும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர்.

(எ-152)

# இளவாலை மீனவருக்கு மீன்பிடிப் படகுகள்

யாழ்ப்பாணம்,ஒக.2

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட இளவாலை கடற்றொழிலாளர்களுக்கு 'அலையன்ஸ்' அபிவிருத்தி நிறுவனம் 24 மீன்பிடிப்படகுகளை வழங்கியுள்ளது.

படகுகள் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை இளவாலை சீண்டிப்பந்தல் கிராமத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்தின் யாழ். மாவட்ட உதவிப்பணிப்பாளர் க.தர்மலிங்கம், அனர்த்த செயலகப் பணிப்பாளர் பாலையா, இளவாலைப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் மற்றும் 'அலையன்ஸ்' நிறுவன அபிவிருத்தி நிறுவன அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

படகுடன் வெளியிணைப்பு இயந்திர வலைகள் என்பனவும் வழங்கப்பட்டன.

படகுகள் ஒவ்வொன்றும் சுமார் 4 லட்சம் ரூபா பெறுமதியானவை எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-7)


## உதயவாக்கு

*மனிதன் இயற்கையில் கெட்ட பழக்கம் உள்ளவனல்ல; அவனது சூழ்நிலைதான் அவனைக் கெட்டவனாக மாற்றுகிறது.*

*-காண்டேகர்.*

## நாளை

ஆடி 18
புதன் கிழமை
03.08.2005
திதி: சதுர்த்தசி
முழுவதும்
நட்சத்திரம் : புனர்பூசம்
பின்னிரவு: 02.52 வரை
சுபநேரம் : 04.34 - 06.04
ராகுகாலம்: 12.04 - 01.34
(யாவும் பழைய நேரப்படி)



## வீட்டுக் கிருத்திய அழைப்பு



பிறப்பு
04.08.1930
இறப்பு
03.07.2005

### அமரர் கணபதி மருதலிங்கம்
### (மணியம்)

அன்னாரின் வீட்டுக்கிருத்தியம் இன்று (02.08.2005) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறுகின்றது. அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு, மதிய போசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய். (38433)(39-11-19) - குடும்பத்தினர்.

# அமெரிக்கத் தமிழருக்கு கசூரினா கடற்கரையில் ஏற்பட்ட அனுபவம்

யாழ்ப்பாணம்,ஓக.2

காரைநகர் கசூரினா கடற்கரைப் பகுதியில் காடைத்தனமும் சமூகச் சீர்கேடுகளும் அதிகரித்துவருவதாக அங்கு சென்றுவிட்டுத் திரும்பி வரும் பலர் கவலை தெரிவிக்கிறார்கள்.

குடும்பத்துடன் பொழுதுபோக்குவதற்காக அங்கு செல்லும் பலர் ஏன் வந்தோம் என்றவகையில் மனச்சோர்வுடன் திரும்பிச் செல்வதாகத் தகவல்கள் கிடைக்கின்றன.

அண்மையில் அமெரிக்காவிலிருந்து இங்கு வந்திருந்த ஒரு தமிழ் அன்பர் கசூரினா கடற்கரையில் தமக்கேற்பட்ட கசப்பான அனுபவத்தை உதயன் பணிமனைக்கு வந்து மிக வேதனையுடன் வெளியிட்டார்.

இது தமிழர் தாயகம். இங்கு தமிழர் நாகரிகமும் பண்பாடும் மேலோங்கி வளர்வதாக வெளிநாட்டிலுள்ளவர்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், இம்மாதிரி பொது இடங்களில் இளைஞர்கள் தமிழர் பண்பாட்டை, தமது காடைத்தனங்களாலும் இழிவான நடத்தைகளாலும் ஏளனத்துக்குள்ளாக்குகிறார்கள் என்று அவர் கவலை தெரிவித்தார்.

கசூரினா கடற்கரைக்குத் தமிழர்கள் மட்டுமல்ல வெளிநாட்டவர்களும் தென்னிலங்கையரும் திரளாக வந்து போகிறார்கள். அவர்கள் மத்தியில் தமிழர் கலாசாரம் எப்படிப்பட்டது என்பதை எடுத்துக்காட்டும் வகையில் நடந்துகொள்ளவேண்டிய தமிழ் இளைஞர்கள், காடைத்தனங்களிலும் சீரழிவுச் செயற்பாடுகளிலும் ஈடுபடுவது கண்டிக்கப்படவேண்டியது என்றார் அவர்.

இளம் வயதினரான தனது (ஆண் - பெண்) இரு பிள்ளைகளுடன் கசூரினா கடற்கரைக்குச் சென்றிருந்த அந்த அமெரிக்க தமிழ் அன்பர், தமது பிள்ளைகளுடன் கடலில் நீந்திக் கொண்டிருக்கையில் அங்கு காணப்பட்ட இளைஞர்கள் சிலர் முற்றிலும் கீழ்த்தரமாக நடந்துகொண்டதாகவும் ஒருவன் பிள்ளைகளுடன் சேஷ்டை விடவும் முற்பட்டான் என்றும் தெரிவித்த அவர், அவர்களின் நடத்தையை வன்மையாகக் கண்டித்து உரியவர்கள் மூலம் தக்க நடவடிக்கை எடுப்பதாக எச்சரித்துவிட்டு வந்ததாகவும் கூறினார்.

கசூரினா கடற்கரைப் பகுதியில் இளைஞர்களின் சீர்கேடான நடத்தைகள் பற்றிய செய்திகள் அடிக்கடி வந்துகொண்டிருக்கின்றன.

வடபகுதியில் மிக முக்கியமான சுற்றுலாப் பிரதேசமான கசூரினா கடற்கரைப் பிரதேசம் கலாசார சீரழிவுக்கு இடந்தராத விதத்தில் பேணப்படவேண்டும் என்பதைப் பலரும் வற்புறுத்திவருகிறார்கள். (ப)

## பெயர் மாற்றம்


இதுவரை காலமும் தங்கரத்தினம் சித்திரா என்று அழைக்கப்பட்ட நான் 31-07-2005 ஆம் திகதி முதலாக எனது பெயரை தங்கரத்தினம் சுகன்யா என சட்டபூர்வமாக மாற்றி அமைத்துக்கொள்கிறேன்.

இனிமேல் எனது சொந்தத் தேவைகளுக்கும் மற்றும் விடயங்களுக்கும் சுகன்யா என்ற பெயரையே பயன்படுத்துவேன் என்பதை இத்தால் சகலருக்கும் உறுதியாக அறியத்தருகின்றேன்.

செல்வி தங்கரத்தினம் சுகன்யா
12 A,Ebenezer place, Dehiwala, Colombo.
(38425)(46-11-19)

S-Lon என்றால் PVC குழாய்கள்
ஆனால் எல்லா PVC குழாய்களும் S-Lon அல்ல.

தரமுயர்ந்த எஸ்-லோன் குழாய்களையே
கேட்டு வாங்குங்கள்



Rediffusion DYR 497/11/04

எஸ்-லோன் இலச்சினை பொறிக்கப்பட்டுள்ளதை
நிச்சயப்படுத்த தவறாதீர்கள்

பரம்பரை பரம்பரையாக மக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்கும் எஸ்-லோன் பி.வி.சி. குழாய்களும் அவற்றிற்கான பொருத்துக்கள். பீலிகள் முதலிய யாவும் சகல அளவுகளிலும் கிடைக்கின்றன. எனவே, நீங்கள் தரக்குறைவான பொருட்களை வாங்கி ஏமாற வேண்டிய அவசியமே கிடையாது.

உங்களுக்கு நீர்க்குழாய்கள், பொருத்துக்கள். பீலிகள் தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எஸ்-லோனை நாடுங்கள்.

S-Lon
என்றும் முன்னணியில்

S-Lon இல்லம்
நிம்மதியான வாழ்வுக்கு

எஸ்-லோன் லங்கா (பிறைவேட்) லிமிட்டட், 7, பிறேபுரூக் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 4792630-4 ∴பெக்ஸ்: 5352741

## வலிகாமம் கல்வி வலயத்தில் ஆசிரியர் செயலமர்வுகள்

வலி.தெற்கு,ஓக.2

ஆரம்பக் கல்வி மொழித்திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டம் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்குவதற்கான ஆசிரியர் செயலமர்வுகளை நடத்த வலிகாமம் கல்வி வலய ஆரம்பக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சி.மாதவகுமார் ஒழுங்கு செய்துள்ளார்.

வலிகாமம் கல்விவலய கோட்டங்களில் தனித்தனியாக இக்கருத்தரங்குகள் நடைபெறும். பாடசாலைகளில் ஆரம்பவகுப்புகளில் கற்பிக்கும் சகல ஆசிரியர்களையும் குறிப்பிட்ட இடங்களில் நடக்கும் செயலமர்வுகளில் தவறாது பங்குபற்ற அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களை சி.மாதவகுமார் கேட்டுள்ளார்.

பின்வரும் திகதி ஒழுங்கில் செயலமர்வுகள் நடைபெற உள்ளன. நாளை புதன்கிழமை தெல்லிப்பழைக் கோட்ட ஆசிரியர்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் -

* எதிர்வரும் 5 ஆம் திகதி சண்டிலிப்பாய் கோட்ட ஆசிரியர்களுக்கு சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியிலும் -
* எதிர்வரும் 8 ஆம் திகதி சங்கானைக் கோட்ட ஆசிரியர்களுக்கு வட்டு.இந்துக் கல்லூரியிலும் -
* எதிர்வரும் 9 ஆம் திகதி உடுவில் கோட்ட ஆசிரியர்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் -
* எதிர்வரும் 13 ஆம் திகதி விடுமுறை விடப்படாத பாடசாலை ஆசிரியர்களுக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியிலும் செயலமர்வுகள் நடைபெறும்.

(எ-152)

## எம்.பிக்களின் தபால் கொடுப்பனவு அதிகரிப்பு

நாடாளுமன்ற உறுப்பினரொருவர் கட்டணமின்றித் தமது தபால்களை அனுப்புவது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினரொருவருக்கு இதுவரையில்வழங்கப்பட்டு வந்த தபால்கொடுப்பனவு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக,விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றும் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, நாடாளுமன்ற உறுப்பினரொருவருக்கு கட்டணமற்ற தபால் சேவைகளுக்கென கொடுப்பனவாக வழங்கப்பட்டு வந்த ரூபா 90 ஆயிரம் இனிமேல் ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ-206)

# தமிழர் கல்விக்கு நிறைந்த சவால்கள்: படம் போட்டுக் காட்டியது கல்விமாநாடு

**தமிழர்களின் கல்விப்பிரச்சினைகள், சவால்கள், கல்விவளர்ச்சி மற்றும் மேம்பாடு ஆகியவை தொடர்பாக ஆராய்வதற்கான கல்வி மாநாடு கடந்த மாதம் 21 ஆம் திகதி முதல் 23 ஆம் திகதிவரை கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்றது. இந்தமாநாடு பற்றிய தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.**

யாழ்ப்பாணத்தின் கல்வித்தரம் வீழ்ச்சியடைந்துள்ளதாகக் கருத்து நிலவும் இன்றைய நிலையில் அதன் காரணங்கள், மாற்றீடுகளைக் கண்டறியும் வகையில் கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையுடன் இணைந்து 'அகவிழி' சஞ்சிகை மூன்று தினங்கள் கல்விமாநாடு ஒன்றை நடத்தியது.

ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் வழிபாட்டுத் தலத்தில் நடைபெற்ற ஆராதனையைத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோனதாஸ் குத்துவிளக்கை ஏற்றிவைக்க 'முத்து முத்தான சித்திரங்கள் இலங்கை முற்றத்தில் சிந்திய ரத்தினங்கள்' என்ற இனிமையான ஆசிரியர் கீதத்துடன் ஆரம்பமான முதல் அமர்வுக்கு கலாசாலை அதிபர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தி தலைமை வகித்தார். இதில் தொடக்கஉரையை கல்வியியற் துறைப் பேராசிரியர் சபா ஜெயராசா நிகழ்த்தினார்.



இன்றைய பெற்றோர், மாணவர்களை நெருக்குவதாகவும் புலமைப் பரிசில் பரீட்சைக்காக அவர்களைத் துரத்திக் கொண்டிருப்பதாகவும் ஆரம்பக்கல்வியில் அக்கறையற்ற தன்மைகள் நிலவுவதுடன், பாடநூலில் பலகுறைகள் இருப்பதையும் சுட்டிக்காட்டிய அவர், தனியார் கல்விக் கூடங்களைக் கல்வியுடன் இருந்து விலக்கமுடியாத நிலையில் அதுபற்றிச் சிந்திக்கவேண்டும் எனவும் தெரிவித்து ஆரம்பக் கல்வி ஆசிரியர்களின் முக்கியத்துவத்தையும் விளக்கினார்.

பேராசிரியர் மோகனதாஸ் தமது உரையில்:-

பணம் பொருத்தமற்றவர்களிடம் நிறைந்துவிட்டதும் சமாதானம், பாதை திறப்பினால் ஏற்பட்ட புதிய வருகைகள் (கையடக்கத் தொலைபேசிகள், உந்துருளிகள் போன்றவை) சமூகத்தை வித்தியாசமான நிலைக்குக்கொண்டுசென்றுவிட்டது - என்று கூறினார்.

வெளிநாட்டுப் பணம், யுத்தத்தால் மாணவர்களின் நிலையில் ஏற்பட்ட மாறுதல்கள் அதனால் கல்வியில் ஏற்பட்ட பின்னடைவுகளைப் படம் பிடித்துக்காட்டியது




துணைவேந்தரின் உரை.

இன்று கல்விநிலை பாதிப்படையக் காரணம் யார்? என்பது கேள்விக்குரியதே. பேராசிரியர் நித்தியானந்தன் மாணவர்கள் இதற்குக் காரணமல்ல எனத் திடமாகத் தெரிவிக்கிறார். இதற்கு வாழ்வியல் முறைகள்தான் காரணம் என்பது அவரது கருத்து. உள்நாட்டு வளங்களைப் பயன்படுத்தி வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்- என்கிறார் அவர்.

மூன்று தினங்களிலும் ஆறு அமர்வுகளாக கருத்துரைகள் இடம் பெற்றன.

### சமூக ஒட்டத்தை மையமாகக் கொண்ட தமிழர் கல்வி

கவிஞர் கல்வயல் வே.குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இரண்டாவது அமர்வில் தமிழர்களின் கல்வி வலுவான சமூக ஒட்டத்தை மையமாகக் கொண்டு வளர்க்கப்பட்டது. ஆசிரியர்கள், மாணவர்களின் தேவைகளை இனங்கண்டு செயற்திறன் கற்றலை மேற்கொண்டால் 'தடி' (பிரம்பு) என்ற அதிகாரப் போக்கு அவசியமற்றதாகிவிடும் என 'தமிழர் கல்வியின் ஊற்றுக்களும் ஒட்டங்களும்' என்ற பொருளில் கருத்துரை வழங்கிய முன்னாள் ஆசிரியர் இ.சிவராமலிங்கம் கூறினார்.

'தமிழ் மரபின் பழைமை' என்ற தலைப்பில் தமிழ்க் கல்வியின் செழுமை, தனிநாயகம் அடிகளாரின் தமிழ்த்தொண்டு, அதனூடாக வேற்றுமொழி அறிஞர்களுக்குத் தமிழில் ஏற்பட்ட ஈர்ப்பு, அடிகளாரின் வாழ்க்கைமுறை என்பவற்றைத் துல்லியமாக எடுத்துரைத்தார் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசு.

விபுலானந்தரின் வாழ்வு குறித்து கலாநிதி சி.மகேஸ்வரனும், ஆசிரியர் சே.கனகரத்தினமும் 19ஆம் நூற்றாண்டில் தமிழ்க் கல்விமரபு குறித்தும் ஆறுமுக நாவலரின் தனி ஆளுமையால் நிகழ்ந்த தமிழ்மொழி, சமயம், சமூகரீதியான மாற்றங்களைத் தமது பன்முகப்படுத்தப்பட்ட பார்வையினூடாக எடுத்துரைத்தார்கள்.

## காலத்தின் தேவை கருதிய சிறந்த முன்னெடுப்பு இது

இரண்டாம் நாள் அமர்வு பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது. இலக்கியங்களில் ஆசிரியப் பாரம்பரியங்கள் குறித்தும் அவர்களது மகத்துவம் பற்றியும் கொள்கை மேன்மை உடைய அவர்கள் பல வளங்களைத் தந்தவர்கள் எனவும் கூறிய பேராசிரியர், புலன் உழுது உண்டவர் வித்தகன் தேவனீர் என அழைக்கப் பட்டவர்கள். ஆசிரியர்கள் சமூகத்தின் மலராகவும் மணமாகவும் திகழ்பவர்கள்- என்றார்.

பண்டிதமணி குறித்த ஆழமான கருத்துக்களை முன்வைத்த கலாநிதி எஸ்.சிவலிங்கராசா, கல்விப் புலத்திற்கு பண்டிதமணி செய்த தொண்டே நல்லாசிரியர்களை இந்த மண்ணுக்கு அறிமுகப்படுத்தியதாகச் சொன்னார்.

பல்கலைக்கழக மூதவையின் பேராளர் பேராசிரியர் எஸ்.ஆறுமுகம் 'கல்வியும் மொழியும்' என்ற தனது கருத்துரையில் மொழிகுறித்த அறிஞர்களின் கருத்துகளைத் தெரிவித்தார். மொழி, கருத்துப்பரிமாற்றத்திற்கும் உணர்வுகளைத் தூண்டுவதற்கும் இன்றியமையாதது. இந்த வகையில் தாய்மொழியின் அவசியத்தையும் சுயமாகச் சிந்தித்து கல்வியில் காத்திரமான இடத்தைப் பெற அது முக்கியமானது என்பதையும் வலியுறுத்தினார்.

சமூக மக்களின் வாழ்க்கைக்கு அடிப்படையான சேவையை வழங்கும் தொழில் ஆசிரியர் சேவை என்பதால் வாண்மைத் தொழில் என்றால் என்ன?, ஆசிரியர்களுக்கான ஒழுக்கக் கோவைகள், ஆசிரிய மாணவர்கள் இந்தக் கோவைகள் என்பவற்றை தன்மைகளை அறிந்திருக்க வேண்டிய கடப்பாடுகளை விளக்கினார் ஆசிரியர் எஸ்.கணேசானந்தம்.

பேராசிரியர் நித்தியானந்தன் தலைமையில் இடம்பெற்ற பிற்பகல் அமர்வில் யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி பீடாதிபதி கலாநிதி கமலநாதன் 'எதிர்கால நோக்கில் கல்வியும் மொழியும்' என்ற பொருளில் கருத்துரை வழங்கினார்.

### எமது கல்வியை தமிழிலே கற்போம்

தாய் மொழிக்கல்வி அவசியம். நாங்கள் எமது கல்வியை தமிழிலேயே கற்கவேண்டும். அதற்காக ஆங்கிலம் படிக்கக்கூடாதென்பதல்ல. புலம்பெயர்ந்த சிறார்கள் நவீன செல்நெறியுடன் கற்கும் போது நமது சிறார்கள் முன்னோக்கிய கல்வி பெறாமல் தவிக்கிறார்கள். எம்முடைய தமிழறிவு போதுமானதா என நாமே நம்மிடம் கேட்க வேண்டும்- என்றார்.

பொதுவாகத் தமிழ் தவிர்ந்த ஏனைய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் தமக்குத் தமிழ் மொழியறிவு அவசியமில்லை என்ற நிலையிலேயே இருக்கிறார்கள். இந்த எண்ணத்திற்கு முத்தாய்ப்பு வைத்தாற்போல் கமலநாதனின் உரை இருந்தது. 'சன்னியாசம் வாங்கிய கதை', 'எவரெடிப்பூனை', 'பூனையின் நோக்கம்' என நகைச்சுவைக் கதைகள் மூலம் சபையைக் கலகலப்பாக்கினார் இவர்.

தாய்மொழிக் கல்வி தேவை. அதனூடாகத்தான் பிறமொழி குறித்துச் சிந்திக்கிறோம். தமிழர் நிலத்தில் தாய்மொழிக் கல்வியே இடம்பெற வேண்டும் என்ற கருத்துகள் தொடர்பாக உதயகுமார், யூட், முகுந்தன் போன்ற மாணவர்கள்,

தாய்மொழிக் கல்வியூடாக அபிவிருத்தி செய்யக்கூடிய வாய்ப்புகள் உண்டா?

தாய்மொழிக் கல்வியால் ஆங்கிலத்தில் புலமை விருத்தி செய்ய முடியாது சர்வதேசத்துடன் தொடர்பு கொள்ள என்ன வழி?

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் தாய்மொழியில் நிபுணத்துவம் இல்லை. தாய்மொழிக் கல்வி எந்தவகையில் பொருத்தமாகும்?

சர்வதேச அரங்கில் உயர்தொழில் பெற ஆங்கிலம் தேவை. தாய் மொழியைக் கற்பதால் இதற்கு வாய்ப்புகள் உண்டா?

இங்கேயுள்ள பேராசிரியர்கள் பலர் வெளிநாடுகள் சென்று ஆங்கிலம் படித்தவர்கள். இப்போது மட்டும் தாய்மொழிக் கல்விதான் தேவை என்பது எந்தவகையில் நியாயம்? - இவ்வாறு பல்வேறு கேள்விகளைத் தொடுத்தனர்.

தலைமை வகித்த பேராசிரியர் நித்தியானந்தன் முன்னேறிவரும் ஜப்பான், சீனா போன்ற நாடுகள் தாய்மொழிக் கல்வியையே கொண்டுள்ளதாகவும் அவை அபிவிருத்தியடைந்து கொண்டிருப்பதாகவும் தாய்மொழிக் கல்வி அபிவிருத்திக்குத் தடங்கலானதல்ல என்றும் பீடாதிபதி கமலநாதன் சொன்னது போல்

தொகுப்பு:
நெடுந்தீவு லக்ஸ்மன்

ஆங்கிலத்தை ஒதுக்கவேண்டும் என்பதல்ல; இரண்டாவது மொழியாக, அதனைக்கற்கமுடியும் என்றும் கேள்விகளுக்குப் பதிலளித்தார் அவர். இருமொழிக் கொள்கை பற்றியும் கூறினார்.

ஆசிரிய மாணவி சசிகலா விக்னேஸ்வரன் தமிழன் என்று நினைத்தால் அதுவே எல்லாக் கேள்விகளுக்குமான விடை என்று ஆக்ரோஷமாகக் கூறினார். பேராசிரியர் நித்தியானந்தன் அதை ஆமோதித்து 'தமிழன்' என்று நினைத்தால் அதுவே அனைத்திற்குமான விடை எனவும்-

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கல்விச்சாலைக் காட்சிகள்



தென்மராட்சி கல்வி வலய முறைசாராக் கல்விப்பிரிவினரால் கடந்த வருடம் நடத்தப்பட்ட கணனிப் பயிற்சியினை நிறைவுசெய்தவர்களுக்கு அண்மையில் சான்றிதழ் வழங்கப்பட்டது.

சான்றிதழ் பெற்ற மாணவர்களுடன் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார், வலய முறைசாராக் கல்விப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் கா.பாலசுந்தரம், மீசாலை வீரசிங்கம் ம.வி. அதிபர் கு.சிவானந்தம் மற்றும் பயிற்சிப் போதனாசிரியர்கள் ஆகியோர் காணப்படுகின்றனர்.

(படம் : தென்மராட்சிச் செய்தியாளர்)



மானிப்பாய் மகளிர் கல்லூரியின் ஆரம்ப பிரிவு விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட மானிப்பாய் அரசினர் வைத்தியசாலைப் பொறுப்பதிகாரி டாக்டர் பொ.பேரானந்தன், கல்லூரி அதிபர் திருமதி சு.ஜெயவீரசிங்கம், மல்லாகம் பதில் நீதிவான் இரா.வசந்தசேனன், சண்டிலிப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.தனபாலசிங்கம், திருமதி தனபாலசிங்கம் ஆகியோரைப் படத்தில் காணலாம்.

(படம்: நவாலிச் செய்தியாளர்)



நவாலி மகாவித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில், வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுவதையும் -

மேடையில் பாடசாலையின் முன்னாள் அதிபர் பி.அலெக்சாண்டர், தற்போதைய அதிபர் பு.ஸ்ரீவிக்கினேஸ்வரன் மற்றும் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதைப் படத்தில் காணலாம். (எ-185)



கல்வித்துறையில் 40 வருடங்களுக்கு மேல் சேவையாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற வலிகாமம் கல்வி வலய ஆரம்பக்கல்வி ஆசிரிய ஆலோசகர் திருமதி இ.இராமலிங்கத்திற்குத் தெல்லிப்பழைக் கோட்டக்கல்வி ஆசிரியர்கள் நடத்திய சேவைநலன் பாராட்டு விழாவில் ஆசிரியர்களான திருமதி ச.கௌரிதரன், திருமதி எஸ்.யோகராசா ஆகியோர் ஓய்வுபெறும் ஆசிரிய ஆலோசகருக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதைப்படத்தில் காணலாம். (-203)

## ஸ்ரீ கருமாரி அம்மன் ஜோதிட நிலையம்


### பண்டித் சுவாமிநாதன்

உலகத்தில் உங்களுக்கு ஏற்படும் இன்பம், துன்பம், நன்மை, தீமைகள் என்பன வற்றைக் கூறுவார். இவரை ஒரு முறை சந்தியுங்கள்! கைரேகை, குடும்பத்தில் கணவன் - மனைவிக்கிடையே உள்ள பிரச்சினை, கல்வி, வீடு, நிலம், பூமி, தொழில், வெளிநாட்டுப் பிரயாணம், வியாபாரம், இலட்சுமி கடாட்சம், திருமணம், குழந்தைப் பாக்கியம், காதல் விவகாரம், எதிரிகளால் ஏற்படும் பிரச்சினை, ஆரோக்கியம், பிணி நோவுகள், பணக் கஷ்டம், நீதிமன்ற வழக்குகள், மந்திரம், சூனியம், செய்வினை ஆகிய சகல காரியமும் பார்க்கப்படும்.

சந்திக்க வேண்டிய நேரம்: காலை 8 மணி முதல் இரவு 7 மணி வரை

தொடர்புகளுக்கு: APAT கெஸ்ற் கவுஸ்
43(75), கண்டி வீதி (கச்சேரிக்குச் சமீபம்), கண்டிக்குளி.
T.P.: 0777 738221 (38362)(29.18.34.42)


## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



ஆண்டவன் படைப்பு
12 - 12 - 1957

கொடியவர் அழிப்பு
02 - 08 - 1999

### அமரர் லயன் மார்க்கண்டு லோகேஸ்வரன்

[இலங்கை மின்சாரசபை ஊழியர், அஜந்தா போட்டோ, வீடியோ, தொலைத்தொடர்பு நிலையம் மற்றும் குறோசறி உரிமையாளர், ச.மு.க.சமாச யாழ்.நல்லூர் பிராந்தியச் செயலாளர், செம்மணி இந்துமயான அபிவிருத்திச் சபை உறுப்பினர்]

என்றும் எம் மனதில் நீங்கா
இடம் பிடித்த அன்புத் தெய்வமே!
எம்மை ஏன் தவிக்க விட்டுச் சென்றீர்?
துரோகிகளின் வஞ்சகச் செயலால்
நீங்கள் எம்மை விட்டுச் சென்றாலும்
என்றும் உங்கள் நினைவிலேயே
வாழ்ந்தோம்! வாழ்கின்றோம்! வாழ்வோம்!

- அன்பு மனைவி, பிள்ளைகள்,
உற்றார், உறவினர்,
நண்பர்கள்.

63, சங்கிலியன் வீதி,
நல்லூர்.
(38396) (39-18-34-42)

## ஆண்டுகள் 25 ஆகியதோ!



அமரர்
### சவரிம்பிள்ளை யோசவ் அன்ரன்
(மாதகல்)

மலர்வு: 14.11.1935 உதிர்வு: 02.08.1980

ஊர்காவலனாய் வாழ்ந்து
மார்பினில் குண்டேந்தி மறைந்த
எங்கள் அன்புத் தந்தையே!
இன்று நீங்கள் மறைந்து கால் நூற்றாண்டுகளா?
எம்மால் நம்ப முடியவில்லையப்பா
உம்முடைய ஆற்றல்களை அருஞ்செயல்களை
இன்றும் அறிகின்றோம் வியக்கின்றோம்!
என்றும் எங்கள் காவலனாய் இருந்து
எம்மைக் காத்திட வழிநடத்திட வேண்டுகின்றோம்.

த.முகவரி:
றக்கா லேன்,
யாழ்ப்பாணம்,
(38413)(26-42-18-34)

உங்கள் நினைவுகளுடன்:
அன்பு மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்.

## சமையல் பாத்திரங்கள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.2

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சியின் இன்பருட்டி, சுப்பர் மடம், பொலிகண்டி மேற்கு பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்களுக்கு 'கியூடெக் - கரித்தாஸ்' நிறுவனம் சமையல் பாத்திரங்களை வழங்கியது.

இதற்கான நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. இதில் சமூகசேவைத்திட்ட முகாமையாளர் மரி கரோலின் வில்லியம், மீன்பிடித் துறைத் திட்டப் பணிப்பாளர் இரட்ணகுமார், ஆழிப்பேரலை அனர்த்த செயலணிக்குழுப் பணிப்பாளர் பாலையா, செயலணிக்குழுவின் பிரதேசப் பொறுப்பாளர் தேவன், கியூடெக் நிறுவனப் பிரதிநிதிகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ஒ-204)

## 'விளக்கு' சஞ்சிகை அறிமுகவிழா

யாழ்ப்பாணம்,ஓக.2

தீவகக் கல்வி வலய ஆசிரியர் நாள் சிறப்பிதழான 'விளக்கு' சஞ்சிகையின் அறிமுக விழா நாளை புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலய பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்வி நிர்வாக பிரதிக் கல்விப் பணிப்பாளர் வ.இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் நூல் அறிமுக உரையை அதிபர் பொ.அருணகிரிநாதன் நிகழ்த்துவார்.

கோட்டக் கல்வி அலுவலர் சோ.தில்லைநாதன் வெளியீட்டுரை நிகழ்த்தி நூலை வெளியிட்டுவைக்க முதற்பிரதியை கோட்டக் கல்வி அலுவலர் க.அரசரட்ணம் பெற்றுக்கொள்வார்.

ஆசிரிய நிலையமுகாமையாளர் வே.திருச்சபேசன் மதிப்பீட்டுரையையும், தீவக கல்வி மேம்பாட்டு பேரவை இணைப்பாளர் வே.சிவநேசன் பதிலுரையையும் நிகழ்த்துவர். (ஒ-204)

## ஓராண்டு நினைவலைகள்

தவப்பேறு
09 - 08 - 1937



சிவப்பேறு
13 - 08 - 2004

திருமதி
### தெய்வானை கிருஷ்ணபிள்ளை

நிலையில்லா வாழ்வினிலே
நீங்காத நினைவுகளைத்
தந்துவிட்டு நிலையான வாழ்வு
தேடிச் சென்ற தெய்வத்தாய்
அன்னாரது ஆத்மசாந்திக்காக இறைவனை இறைஞ்சுகின்றோம்.

கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.
060 2213076

- குடும்பத்தவர்கள்.
(37962)(18.34.42)


## யாழ்ப்பாணத்தில்

பிரபல தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு பின்வருவோர் தேவை

### 1. Circulation Manager
### விநியோக முகாமையாளர்

மேற்படி பதவிக்குக் குறைந்தது G.C.E.(A/L) பரீட்சையில் சித்தியடைந்தவராகவும், 40 வயதிற்கு உட்பட்டவராகவும், விநியோகம், நிர்வாகம், கணக்கியல் (Circulation, Administration and Accounts) ஆகிய துறைகளில் குறைந்தது 5 வருட அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

### 2. Asst. Accountant
### உதவிக் கணக்காளர்

மேற்படி பதவிக்குக் குறைந்தது AAT (Final)/CIMA Intermediate/ICA Intermediate or equivalent பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் வயது 25-40இற்கும் இடைப்பட்டவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் Accounts, Debt, recovery ஆகிய துறைகளில் குறைந்தது ஒரு வருட அனுபவமுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

H.R.Manager,
P.Box. No.23,
Jaffna.

(C/44391)(42-18-34)



## கருமாரி அம்மன் ஜோதிடம்


### ஸ்ரீ பாலகிருஷ்ண சாஸ்திரி

இந்தியாவிலிருந்து வருகைதந்துள்ளார்.
இவர் கைரேகை மூலமாக - நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், கல்வி, கணவன்-மனைவி ஒன்று சேர்தல், வெளிநாட்டுப் பயணம் பற்றியும் மற்றும் எதிர்காலப் பலன்களையும் அறிந்துகொள்ள நாடுங்கள்:

**பிள்ளையார் இன், அறை எண் 9,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.No.: 0779233191 (38399)(26.18.34.42)



## TELEPHONE INTERCOM SYSTEM




*02 to 100 Extension
*Call metering facility
*Automatic Fax switching
*1 Year warranty & After sales service

Micro Bytech Int (pvt) Ltd.
711, K.K.S, Road
Jaffna
T.P. 222 6188, 0773203721


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



பிறப்பு
05 - 04 - 1981

வீரச்சாவு
04 - 07 - 2005

### சங்கரப்பிள்ளை சுகுனேஸ்
(சுமன்)
(துணைப்படை வீரர் - வீரவேங்கை பைந்தமிழ்)

தாயை விட தாய் மண்ணை நேசித்து
தானைத் தலைவன் சேனைதனில்
புலியாகிப் போராடி களம் தனிலே
புயலெனப் புரியவைத்த பைந்தமிழே
நீ மறைந்து மாதம் ஒன்று ஆனாலும்
மறையாதே உனது நினைவுகள்!

நாளை (03.08.2005) புதன்கிழமை முற்பகலில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியையிலும் நினைவஞ்சலி நிகழ்விலும் கலந்து ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் போராளிகள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நிரந்தர முகவரி:
கரவெட்டி வடக்கு, கரவெட்டி.
தற்காலிக முகவரி:
D5, துணுக்காய் வீதி, யோகபுரம், மல்லாவி.

ச.சுதன்
- குடும்பத்தினர்

(C.44132) (39-18-34-42)

## 31ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
1927 - 02 - 06



மறைவு
2005 - 07 - 05

### சின்னத்தம்பி மயில்வாகனம்

அன்புடனும் பாசத்துடனும் எம்மோடு வாழ்ந்த உங்களது ஆத்மா சாந்தியடைய ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

05-07-2005 அன்று சிவபதமடைந்த எமது அன்புத் தந்தையின் பிரிவுச்செய்தி அறிந்து எமது இல்லம் விரைந்து எமது வேதனை உணர்வுகளைப் பகிர்ந்து இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு கண்ணீர் அஞ்சலி செலுத்தியோருக்கும் தொலைபேசி, தந்திமூலம் துயரத்தைப் பகிர்ந்துகொண்டோருக்கும் பல வழிகளில் உதவிகள் புரிந்த பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினருக்கும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது இதயம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். நாளை (03.08.2005) புதன்கிழமை முற்பகலில் எமது இல்லத்தில் நடைபெறுகின்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் பங்கேற்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

'வித்தியா வாசா', T.P. No: 3572
பூதராயர் ஒழுங்கை, பருத்தித்துறை.

மனைவி,
பிள்ளைகள்.
(38244)(18.34.42)

# நல்லூர் ஆலயப் பெருந்திருவிழாவை ஒட்டி புலம்பெயர் தமிழர்கள் இங்கு குவிந்துள்ளனர்

நல்லூர்,ஓக.2

சரித்திரப் பிரசித்திபெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தின் பெருந்திருவிழாவை ஒட்டி புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசித்து வரும் யாழ்ப்பாணத்தவர்கள் பலரும் யாழ்ப்பாணத்துக்கு வந்து குவியத் தொடங்கியுள்ளனர்.

மேற்கு நாடுகள் பலவற்றில் இது கோடை விடுமுறைக்காலம் ஆதலால் புலம்பெயர்ந்த தமிழர்கள் பலரும் தங்கள் குழந்தைகளோடு சுற்றுலா கழிக்க யாழ்ப்பாணத்து க்கு வரத் தொடங்கி உள்ளனர்.

நல்லூர் ஆலயப் பெருந்திருவிழா எதிர் வரும் 10 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாக இருக்கிறது.

பெருந்திருவிழாவையொட்டி ஆலய கோபுரங்களும், மண்டபங்களும் வர்ணம் பூசி மெருகூட்டப்பட்டு வருகின்றன.

நல்லூர் கந்தசுவாமி ஆலய விசேட உற்சவ தினங்கள் வருமாறு:

- 10.08.2005 புதன்கிழமை- கொடியேற்றம் - பகல் 10மணி
- 19.08.2005 வெள்ளிக்கிழமை - மஞ்சம்- மாலை 5.30 மணி
- 26.08.2005 வெள்ளிக்கிழமை - கார்த்திகை உற்சவம்- மாலை 5.30 மணி
- 29.08.2005 திங்கட்கிழமை - சந்தான கோபாலர் உற்சவம்- காலை 7 மணி
- 29.08.2005 திங்கட்கிழமை -கைலாச வாகனம்- மாலை 5.30 மணி
- 30.08.2005 செவ்வாய்க்கிழமை - கஜவல்லி மகாவல்லி உற்சவம்- காலை 7 மணி
- 30.08.2005 செவ்வாய்க்கிழமை - வேல் விமானம்- மாலை 5.30 மணி
- 31.08.2005 புதன்கிழமை - தெண்டாயுதபாணி உற்சவம்- காலை 7 மணி
- 31.08.2005 புதன்கிழமை - ஒரு முகத்திருவிழா - மாலை 5.30மணி
- 01.09.2005 வியாழக்கிழமை - சப்பறம்- மாலை 6.30 மணி
- 02.09.2005 வெள்ளிக்கிழமை - தேர்- காலை 7 மணி
- 03.09.2005 சனிக்கிழமை - தீர்த்தம்- காலை 7 மணி
- 04.09.2005 ஞாயிற்றுக்கிழமை - பூங்காவனம்- மாலை 5.30 மணி
- 05.09.2005 திங்கட்கிழமை - வைரவர் உற்சவம்- மாலை 6.30 மணி

(ஐ-111)

## மோ.சைக்கிளிலிருந்து தூக்கி வீசப்பட்டவர் காயமடைந்தார்

தென்மராட்சி, ஓக.2

வீதி வளைவு ஒன்றில் வேலிப் பாதுகாப்புக்காகப் போடப்பட்டிருந்த மரக்குற்றியுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் அதில் பயணம் செய்தவர் தூக்கிவீசப்பட்டார். அவரது கால் ஒன்று முறிந்தது.

மிருசுவில் விடத்தற்பளைப் பகுதியில் கடந்த வெள்ளியன்று இச்சம்பவம் இடம் பெற்றது.

மிருசுவில் உசனைச் சேர்ந்த நடராசா மதுராகன் (வயது 30) என்பவரே காயமடைந்தவராவார்.

இவர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

(ஐ-117)




# ஆடிஅமாவாசை தினத்தன்று கீரிமலையில் பிதிர்க்கடன்களை நிறைவேற்ற ஏற்பாடுகள்

வலி.தென்மேற்கு,ஓக.2

ஆடி அமாவாசை தினமான எதிர்வரும் 4ஆம் திகதி வியாழக்கிழமை கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலயத்தில் விசேடபூசை வழி பாடுகளும் நெய்த்தீபம் (மோட்ச தீபம்) ஏற்றலும் இடம்பெறவுள்ளது.

அன்று காலை ஆலயத்திலிருந்து ஸ்ரீ நகுலேஸ்வரப் பெருமான் கீரிமலையில் உள்ள புனித தீர்த்தக் கரைக்கு எழுந்தருளி அங்குள்ள மண்டபத்தில் அமர்ந்து அருள்பாலிப்பார்.

இதேவேளை,

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய தீர்த்த உற்சவமும் கீரிமலைப் புனித தீர்த்தக் கரையில் அன்றைய தினம் காலையில் நடைபெறவுள்ளது. அன்று காலை மாவைக்கந்தன் மாவிட்டபுரத்திலிருந்து எழுந்தருளி கீரிமலை புனித தீர்த்தத்தில் தீர்த்தமாடுவார்.

ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலையில் தங்கள் முன்னோர்களின் பிதிர்களுக்கு புண்ணிய தீர்த்தக்கரையில் பிதிர் தர்ப்பணம் செய்து தீர்த்தமாடுவது தொன்றுதொட்டு இந்து சமய மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வழக்கமாகும். இம்முறையும் ஆடி அமாவாசை தினத்தன்று பெரும் எண்ணிக்கையிலான அடியார்கள் கீரிமலைக்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

வலி.வடக்குப் பிரதேச சபையினரும், வலி வடக்குப் பிரதேச செயலகத்தினரும் இணைந்து பக்தர்களுக்கான குடி தண்ணீர் மற்றும் சுகாதார வசதிகளைச் செய்துள்ளனர்.

தெல்லிப்பழை மற்றும் சேந்தாங்குளம் இராணுவ சோதனைச் சாவடிகளுக்கு ஊடாக தத்தமது வாகனங்களில் கீரிமலைக்கு பக்தர்கள் செல்ல முடியும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அன்றையதினம் ஸ்ரீ நகுலேஸ்வரர் ஆலயத்தில் அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளதாக ஆலய ஆதீனகர்த்தா பிரம்ம ஸ்ரீ கு.நகுலேஸ்வரக் குருக்கள் தெரிவித்தார்.

வட பிராந்தியப்போக்குவரத்து சபையினரும் கீரிமலைக்கு விசேட பஸ்சேவைகளை நடத்தவுள்ளனர்.

(ஐ-135)

# மாவிட்டபுரம் ஆலயம் செல்வோர் சோதனைக் கெடுபிடிகளால் அவதி

வலி. தெற்கு, ஓக.2

மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் நடைபெற்றுவரும் காம்யோற்சவ நிகழ்வுகளில் கடந்த வெள்ளியன்று நடைபெற்ற கார்த்திகைத் திருவிழாவைக் காண்பதற்காக குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் அடியார்கள் பெரும் எண்ணிக்கையில் வருகை தந்தனர். இவர்கள் இராணுவத்தினரின் கெடுபிடிகளால் பெரிதும் சிரமங்களுக்குட்பட வேண்டியநிலை ஏற்பட்டது.

ஆலயத்துக்குச் செல்லும் யாவரும் சோதனைச் சாவடிகளில் உடற்பரிசோதனைகள், வாகனப் பரிசோதனைகள் மற்றும் ஆள் அடையாளப் பதிவு என்பவற்றுக்கு உட்படுத்தப்பட்டு பாதுகாப்புப் படையினரால் வழங்கப்படும் பாஸ் பெற்றே செல்லவேண்டியேற்பட்டது.

சோதனைச் சாவடிகளில் அடையாள அட்டைகளைப் பதிவுசெய்து வாகனப் பதிவு செய்து உட்செல்லும் பயணிகளின் எண்ணிக்கை பதியப்பட்ட பின்னரே பாஸ் வழங்கப்படுகின்றது. அதன்பின் ஒவ்வொருவரும் உடற் பரிசோதனைகளுக்கு ஆளாக்கப்பட்டே ஆலயம் செல்ல அனுமதிக்கப்படுகின்றனர்.

மாவிட்டபுரம் கந்தசாமி கோயில் திருவிழா ஏற்பாடுகள் தொடர்பாக வலிகாமம் வடக்குப் பிரதேச செயலகத்தில் கடந்த ஜூன் மாதம் 30 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் ஆலயத்துக்கு வாகனங்களில் செல்லும் அடியவர்கள் எவரும் கட்டுப்பாடுகள், சோதனைகள் எவையும் இன்றித் தெல்லிப்பழை, சேந்தான்குளம் பாதைக்ளூடாகச் சென்று வரலாம் எனப் பாதுகாப்புப் படையினர் தரப்பில் உறுதிமொழி வழங்கப்பட்டிருந்தது. ஆனால், அதற்கு மாறாக தற்போது அடையாள அட்டை, உடற்பரிசோதனை, வாகன பரிசோதனை - பாஸ் நடைமுறை என்பன கடைப்பிடிக்கப்படுவதால் அடியார்கள் பெரும் சிரமங்களை அனுபவிக்க நேரிட்டுள்ளது.

(ஐ-152)

# இருதய துவார நோய் பாதித்த பெண்ணுக்கு நிதி கையளிப்பு


இருதயத்தில் துவாரம் உள்ளதால் பாதிக்கப்பட்ட இளம் குடும்பப் பெண்ணின் வைத்தியச் செலவுக்கு ஒரு லட்சத்து 16ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தின் வேண்டுகோளுக்கிணங்க பரோபகாரிகளால் இளம் குடும்பப் பெண்ணின் உயிர்காப்பு நிதியத்திற்கு வழங்கப்பட்ட இந்தத் தொகை அவரிடம் கையளிக்கப்பட்டது.

கச்சாயைச் சேர்ந்த விநாயகமூர்த்தி குணச்செல்வி என்னும் பெண்ணிடம் இத் தொகைக்கான காசோலையை கழகத் துணைத்தலைவர் லயன் ந.சற்குணராசா கையளித்தார்.

கழக அலுவலகத்தில் இடம்பெற்ற இந் நிகழ்வில் கழகப் பிரதிநிதிகள் பலரும் கலந்து கொண்டனர்.

(ஐ-117)



யாழ்.மாவட்டத்தின் பின்தங்கிய பிரதேசத்திலுள்ள ஒரு வைத்தியசாலையில் உபயோகிப்பதற்காக நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனம் அதன் யாழ்ப்பாண அலுவலகம் ஊடாக ஈ.சீ.ஜீ. சாதனத்தை மாகாண பிரதி சுகாதாரப் பணிப் பாளரிடம் 29.07.2005 அன்று கையளித்தது. அப்போது எடுக்கப்பட்ட படம் இது.

# உணவு கையாளும் நிலையங்களில் எரிபொருள்கள் விற்பதற்குத் தடை!

குருநகர், ஓக.2

உணவு கையாளும் நிலையங்களில் பெற்றோல் மற்றும் எரிபொருள்களை விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. அவ்வாறு விற்பனை செய்வதாயின் அதற்கான அனுமதியை உரிய பிரதேச செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும்.

ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள வேலணைப் பிரதேச சபைக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுடன் கடந்த வெள்ளியன்று நடத்தப்பட்ட சுகாதாரம் தொடர்பான அறிவுறுத்தல் கூட்டத்தில் மேற்கண்டவாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

வேலணைப் பிரதேசச் சபைச் செயலாளர் தலைமையில் வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் கலந்துகொண்ட யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் அலுவலகத்தின் உணவு - மருந்து அதிகாரி த.மகாதேவன், இந்த அறிவுறுத்தலை வழங்கினார். இக்கூட்டத்தில் வேலணைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்கள் சுமார் 46 பேர் கலந்துகொண்டனர்.

இக்கலந்துரையாடலில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

- உணவுப் பொருள்கள் விற்பனை செய்யப்படும் இடங்களில் பெற்றோல் மற்றும் எரிபொருள்களைச் சேர்த்து வைத்து விற்பனை செய்யக்கூடாது.
- பெற்றோல் மற்றும் எரிபொருள் விற்பனை செய்யப்படும் நிலையங்களில் அடுப்பு எரிப்பதுவும் தீப்பற்றக்கூடிய பொருள்களை வைத்திருப்பதும் தவிர்க்கப்படவேண்டும்.

(ஐ-51)

# குறைந்த செலவில் உச்சப்பயன்பெற தூவல் நீர்ப்பாசன முறை உதவும்

## ஆய்வுக் கருத்தரங்கில் விவசாயிகளுக்கு ஆலோசனை

யாழ்ப்பாணம்,ஓக.2

விவசாயிகள் குறைந்த செலவில் உச்சப் பயனைப் பெற தூவல் நீர்ப்பாசனமுறை உதவும். விவசாயிகள் இம்முறையைக் கைக்கொள்ள 50 வீதம் மானிய அடிப்படையிலான கடன் திட்டங்கள் வழங்கப்படுகின்றன.

தூவல் நீர்ப்பாசன அறிமுக விழாவும், அதன் பயன்பாடு தொடர்பான ஆய்வுக் கருத்தரங்கும் கடந்த வெள்ளிக்கிழமை கமநல அபிவிருத்தித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றன.

கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன. அப்போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

பயிர்களுக்கு ஏற்படும் நோய்த்தாக்கங்கள், அவற்றைக் கட்டுப்படுத்தும் முறைகள் விவசாய உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தும் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துத்தல், நீரின் பாதுகாப்பு தூவல் நீர்ப்பாசன பயன்பாட்டில் ஏற்படும் நன்மைகள் குறித்தும் கருத்துரைகள் வழங்கப்பட்டன.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிறுவனத்தின் நிதி உதவியுடன் தூவல் நீர்ப்பாசன முறை யாழ்ப்பாணத்தில் அறிமுகஞ்செய்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நிகழ்வில் யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர், ஆ.சிவசுவாமி, விவசாய பீடாதிபதி பேராசிரியர் சு.இராசதுரை, பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை, பொருளியல் பேராசிரியர் எஸ்.நித்தியானந்தன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்திட்ட சிரேஷ்ட நிகழ்ச்சித் திட்ட உத்தியோகத்தர் டாக்டர் ஞானாசிவபாதசுந்தரம், விவசாயத் திணைக்கள ஆராய்ச்சிப்பிரிவு உதவிப் பணிப்பாளர் எஸ்.விஜயரத்தினம் ,யாழ்.மாவட்ட பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கே.சங்கர் ஆகியோரும் இதில் கலந்துகொண்டனர்.(ஐ-204)

## கணவனுக்கும் மனைவிக்கும் எரிகாயம்

யாழ்ப்பாணம்,ஓக.2

தனக்குத்தானே தீமூட்டி எரிந்தார் எனத் தெரிவித்து உடல் பூராகவும் எரிந்த நிலையில் இளம் குடும்பப்பெண் ஒருவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். காப்பாற்ற முயன்ற அவரது கணவனும் எரிகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

ஈவினையில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ரூபதாஸ் தர்சினி (வயது 24) என்பவரும் அவரது கணவர் கந்தையா ரூபதாஸ் (வயது 27) என்பவருமே எரிகாயங்களுக்கு உள்ளானவர்களாவர்.

(ஐ-15)

# ஜனாதிபதித் தேர்தல் திகதி இம்மாத இறுதியில் அறிவிப்பு?

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான அறிவிப்பு ஓகஸ்ட் மாதம் 3 ஆம் வாரத்தின் பின்னர் வெளியிடப்படும் என்று அரசமைப்புச் சட்ட வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

அரசமைப்பு மற்றும் ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் ஒழுங்கு விதிகளுக்கமைய அடுத்த ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும் திகதியை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 20 ஆம் திகதிக்கு முன்னர் அறிவிப்பதற்கு தேர்தல் ஆணையாளருக்கு அதிகாரம் கிடையாதென வல்லுநர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தேர்தல் தொடர்பான திகதி அறிவிக்கப்பட்ட பின்னர் குறித்த வேலைகள் துரிதகதியில் நடைபெறும் என்றும் தேர்தல் திணைக்கள வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதி தொடர்பாக தேர்தல் ஆணையாளர் எடுக்கும் தீர்மானத்திற்கு மதிப்பளிப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி, ஜே.வி.பி.,ஜாதிக ஹெல உறுமய, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தெரிவித்துள்ளன.

அரசமைப்பின்படி அடுத்த ஜனாதிபதித் தேர்தல் தற்போது பதவி வகிக்கும் சந்திரிகா அம்மையாரின் பதவிக்காலம் முடிவடைவதற்கு ஒரு மாதத்திற்கு குறையாமலும் இரண்டு மாதங்களுக்கு மேற்படாததுமான காலப்பகுதியினுள் நடத்தப்படவேண்டும் என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

அனைத்து விடயங்களையும் ஆராய்ந்த பின்னர் உரிய நேரத்தில் தனது வர்த்தமானி அறிவித்தலையும் ஊடக அறிவிப்பினையும் வெளியிடவுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கடந்த வாரத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிற்கும் ஜே.வி.பி.பிரசார செயலாளர் விமல் வீரவன்ஸவிற்கும் இடையே நடைபெற்ற விசேட சந்திப்பொன்றின் போது ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதியை அறிவிக்குமாறு கோரி தேர்தல் ஆணையாளருக்கு கடிதமொன்றை அனுப்பி வைக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும், ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதியை பெரும் இரகசியமாக காப்பதற்கு தேர்தல் ஆணையாளர் தீர்மானித்துள்ளார்- என்று தெரிவிக்கப்படுகிறது.(எ-க)

# கற்கோவளத்தில் 100 வீடுகளுடன் மாதிரிக் கிராமம் நிறுவ அடிக்கல்

தென்மராட்சி,ஓக.2

வடமராட்சி கிழக்கு கற்கோவளம் புனித நகர் பகுதியில் 100 வீடுகள் கொண்ட மாதிரிக் கிராமம் அமைக்கப்படவுள்ளது.

'கே.பி.எம்.ஜி.கிராமம்' ( K.P.M.G. Village) என்னும் பெயரில் உருவாக்கப்படவுள்ள இந்த மாதிரிக்கிராம வீடமைப்புத் திட்டத்திற்கான அடிக்கல் நடும் விழா எதிர்வரும் 6ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ். அரச அதிபர் க.கணேஸ் தலைமையில் நடைபெறும்.

கனடாவில் இயங்கும் பட்டயக் கணக்காளர் அமைப்பின் 'போர்ட் றோட்ஸ்' என்ற நிறுவனத்தினர் இந்த மாதிரிக் கிராமத்தை அமைக்கவுள்ளனர்.

ஒவ்வொரு வீடும் தலா 7 லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளது. இவ் வீடுகள் ஆழிப் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப் படவுள்ளன.

அடிக்கல் நடும் விழாவிற்கான அழைப்பிதழ்களை நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் அனுப்பியுள்ளார்.

(ஐ-117)

# மாடுகளுக்கு தடுப்பூசி

கோப்பாய் கால் நடை வைத்திய அதிகாரி பிரிவில் மாடுகளுக்கு தொண்டை அடைப்பான் நோய்த் தடுப்பூசி ஏற்றப்பட்டு வருகின்றது.

இன்று முதல் எதிர் வரும் 4ஆம் திகதி வரை தடுப்பூசி ஏற்றப்படவுள்ள இடங்களின் விவரம் வருமாறு:-

இன்று செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 9 மணிவரை கல்வியங்காடு வயல் வெளிக் கந்தசுவாமி கோயிலடி, 9 மணி தொடக்கம் 10.30 மணிவரை கல்வியங்காடு ஞானபாஸ்கரோதய விளையாட்டரங்கம்.

நாளை புதன் கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 9 மணி வரை இராச வீதி காற்றாடிக் கிணற்றடி, 9.30 மணி தொடக்கம் 10.30 மணிவரை இருபாலை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அருகில் உள்ள ஞான வைரவர் கோயிலடி.

நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 7.30 மணி தொடக்கம் 9 மணி வரை நீர்வேலி அரச கேசரிப்பிள்ளையார் கோயிலடி, 9 மணி தொடக்கம் 10.30 மணி வரை நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோயிலடி.

(எ-11-203)

# தையல் இயந்திரம் அன்பளிப்பு

நல்லூர்,ஓக.2

நெடுந்தீவில் போரினால் கணவனை இழந்த விதவைப் பெண்களுக்கு தையல் இயந்திரமும், அதற்கான உபகரணங்களும் வழங்கப்பட்டன.

போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான புனர்வாழ்வு நடவடிக்கைகள் திட்டத்திற்கமைய மிகவும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட நால்வருக்கு நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணி மனையில் வைத்து யாழ்.மாவட்ட நிவாரண புனர்வாழ்வு நல்லிணக்கச் செயலகத்தால் இவை வழங்கப்பட்டன.

(எ-111)

# ஆங்கில டிப்ளோமா வகுப்புகள் ஆரம்பம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும் ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கில டிப்ளோமா வகுப்புகள் எதிர்வரும் 5ஆம் திகதி முதல் வழமையான நேர அட்டவணைப்படி நடைபெறும் என்று ஆங்கில மொழிக் கற்பித்தல் துறைத் தலைவி திருமதி ச.ரவீந்திரன் தெரிவித்துள்ளார். (எ-203)


## வேலையாள்கள் தேவை

எமது தொலைத்தொடர்பு நிலையத்தில் வேலை செய்யக் கூடிய ஆள்கள் தேவை.

(இருபாலரும் - வயதெல்லை இல்லை)

தொடர்புகளுக்கு :

**அம்பாள் தொலைத் தொடர்பு நிலையம்,**

(38417) (18-21-34-32)

துர்க்கை அம்மன் கோயிலடி, தெல்லிப்பழை.



## மதுரை மீனாட்சி அம்பாள் அருள்வாக்கும் ஜோதிடமும்



K.V. கோவிந்தசுவாமி & ஸ்ரீ லட்சுமி

இந்தியாவிலிருந்து கணவன், மனைவி இருவரும் வருகைதந்துள்ளார்கள். இவர்கள் கைரேகை மூலம் நடந்தவை, நடக்கின்றவை, நடக்கப்போகின்றவை மற்றும் தொழில், வியாபாரம், விவாகப் பொருத்தம், கல்வி, வெளிநாடு செல்லும் வாய்ப்பு, நோய் போன்றவற்றிக்குப் பரிகாரம் கூறுவார்கள். ஒருமுறை சந்தித்து பாருங்கள். [காலை 9 மணியிலிருந்து மாலை 8 மணி வரை]

தொடர்பு:- 50, Navalar Road, Jaffna. (Near Manohara Theartre) T.P:- 776446525. (38376) (54-34-18) Back side.

## PRESIDENT CFL



பல்புகள் இப்போது இலகு தவணையில் கிடைக்கும்

- SLS இன் FIVE STAR தரச்சான்று
- DNV Norway யின் Iso 9000 சான்று
- 8000 Hours Life time
- President Lighting Singapore நிறுவனத்துடன் சேர்ந்து ஏற்றுமதிக்காகத் தயாரிக்கப்பட்டது.
- இலங்கை உற்பத்தி, ஒரு வருட உத்தரவாதம்.

உங்களது விலாசத்தை உறுதிப்படுத்தும் இறுதிமாத மின்சாரப் பட்டியலுடன் அடையாள அட்டையும் கொண்டு வரவேண்டும். (38346)(26.34.18)

தொடர்பு: Light Line, 580, K.K.S. Road, Jaffna. T.P.: 0777 224556.

## ஜோதிடம்

Pandit Kr. Luxumy Narasimha

ஸ்ரீ சாயி பாபா ஜோதிடம் துர்க்காம்பாள் வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவின் புகழ்பெற்ற கேரள மாந்திரீக ஜோதிடர் கணவன் -மனைவி சண்டை, பிரிவு/காதல் திருமணத்தடை - இதுவரை திருமணமே ஆகாதவர்கள்/ பிள்ளைகள் சொல் கேளாமல் திரிவது/ வேலை, தொழில் உத்தியோகம் இப்படி பலவாறான பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பார். செய்வினை, பில்லி சூனியத்தால் பாதிப்பு/கண் திருஷ்டியினால் வாழ்வில் முன்னேற்றம் இல்லாமை ஆகியவற்றிற்கும் பலன் சொல்வதோடு தீர்த்தும் வைப்பார்.

தொடர்பு: SRI SAWBAKYA INN

Guest House,

235/7,PointPedro Road, Anaipanthy, Jaffna.

(38397) T.P.: 021- 222 6779, 077 9233070. (21.34.18)

## பிரத்தியேக ஆங்கில வகுப்புகள்

அனுபவமிக்க பட்டதாரி ஆசிரியரினால் பிரத்தியேகமாக ஆங்கிலம் கற்பிக்கப்படும்.

தொடர்பு: 021-2227612

(38420) (21-


## மரண அறிவித்தல்

நேற்றைய (01.08.2005) உதயன் நாளிதழ் 4 ஆம் பக்கத்தில் பிரசுரமாகிய - **விநாயகமூர்த்தி திருஞான சம்பந்தர்(சம்பந்தர்)** அவர்களுடைய மரண அறிவித்தலில் அவரது மைத்துனர் வரதராஜா (நோர்வே) அவர்களின் பெயர் இடம் பெறத் தவறிவிட்டது. அத்துடன் ஸ்ரீகரன் (I.O.M) என்பது சிர்கான் என்று பிரசுரமாகிவிட்டது. ஆகவே இவற்றைத் திருத்தி வாசிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

திருமதி தி.மங்கையர்க்கரசி (மனைவி).

18,பிரம்படி வீதி, கொக்குவில். (38416) (21-18-34-32)

## நெஞ்சைவிட்டகலாத நினைவலைகள்

27ஆம் ஆண்டு | 2 ஆம் ஆண்டு





Dr. சரவணமுத்து சோமசுந்தரம்

பிறப்பு: 02✲ 11✲1912

மறைவு: 27✲ 06✲1978

திருமதி இராசலட்சுமி சோமசுந்தரம்

பிறப்பு: 12✲ 03✲1924

மறைவு: 26✲ 07✲2003

அன்பின் பிறப்பிடமாய் ஆதரவு காட்டிய
பிதா மாதாவின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்
அன்பால் அரவணைத்து ஆதரவு மொழிபேசி
பண்பாய் வாழ்ந்த உங்கள் மறைவுகளை
எம்மால் மறக்கமுடியவில்லை.

உங்கள் அன்பின்:
திரு.திருமதி சோ. சுந்தராஜன் குடும்பம்,
திரு.திருமதி சோ.ஸ்ரீநிவாசன் குடும்பம்,
திருமதி சீதாலட்சுமி நாகரத்தினம் குடும்பம்,
திரு.திருமதி குகநாதன் குடும்பம் மற்றும்
பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

Dr. சோ.சுந்தரராஜன்,
இல.2, செட்டித்தெரு,
நல்லூர்.

(38418)(26-21-18-34)


## சின்னமடு அன்னையின் யாத்திரை ஸ்தல கடைகளை ஏலத்தில் பெறுவோருக்கான அறிவித்தல்

ஷ ஆலய சுற்றாடலில் கடைகளை ஏலத்தில் பெற விரும்புவோர் நாளை (03.08.2005) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலயத்துக்கு வருகை தரவும்.

- பரிபாலகர்.

(மேலதிக விவரங்களை 28.07.2005 வியாழன் வெளியான உதயன் பத்திரிகையின் 2ஆம் பக்கத்தில் பார்க்கலாம்)

(38423) (42-21-34-18)


## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகரெத்தினம் றஞ்சினிதேவி



திருநெல்வேலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் இல.145, பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரெத்தினம் றஞ்சினிதேவி அவர்கள் 31.07.2005 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசேந்திரம் - இராமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் கனகரெத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் துஷாந்தினி (பிரான்ஸ்), விமல்ராஜ் (கனடா) ஆகியோரின் சிறிய தாயாரும் வசந்தாதேவி, யோகேந்திரநாதன் (லண்டன்), காலஞ்சென்ற மகேந்திரநாதன் மற்றும் புலேந்திரநாதன் (ஜேர்மனி), ஞானகலாதேவி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.08.2005) செவ்வாய்க் கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் துண்டி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் எற்றுக்கொள்ளவும்.

145, பாண்டியன்தாழ்வு, சுண்டிக்குளி. (38424)(26.18.34.21)

தகவல்: அ.கனகரெத்தினம் [கணவர்].

### திருமதி மகாலிங்கம் விக்னேஸ்வரி

யாழ்ப்பாணம், சுண்டிக்குளியைப் பிறப்பிடமாகவும் வல்வெட்டியை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான திருமதி மகாலிங்கம் விக்னேஸ்வரி அவர்கள் 31.07.2005 ஞாயிற்றுக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி தம்பையா தம்பதியரின் பாசமிகு புதல்வியும் மகாலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் மாலதி, ஜெயலதி, சிவேந்திரன் ஆகியோரின் பாசமிகு தாயும் தவமணி, புஸ்பவதியம்மா, ருக்குமணி (இந்தியா) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஸ்ரீறஞ்சினிதேவி, ராஜசுலோசனா (நோர்வே), சற்குணராஜா (கனடா), ரவீந்திரராஜா, புஸ்பராஜா (கனடா), சுதர்சினி, கௌந்தினி (London), பிரதீபன் (London), வாகீசன், பிரமினாளினி (இந்தியா) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.08.2005) புதன்கிழமை கனடா நேரப்படி காலை 9 மணியளவில் கனடாவில் நடைபெறும். அதே நாளன்று புதன்கிழமை (03.08.2005) எமது இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராச வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய். (38422)(32-18-34-21)

தகவல்: சகோதரிகள், மருமக்கள்.

# உளத்தாக்கத்துக்கு உள்ளானோரை மீட்டெடுக்க வேண்டியது பாரிய பணி

## தமிழீழ சுகாதாரப் பணிப்பாளர் வலியுறுத்து

கிளிநொச்சி,ஓக.2

தமிழர் தாயகத்தில் போரும் ஆழிப் பேரலையும் ஏற்படுத்திய உளத் தாக்கங்களிலிருந்து மக்களை மீட்டெடுக்க வேண்டியது உளவளத் துணையாளர்களின் பாரிய பணி.

- இவ்வாறு தமிழீழ சுகாதார சேவைகள் பணிப்பாளர் ச.விக்கிரமன் தெரிவித்தார்.

கடந்த சனியன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் திட்டமிடல் செயலகத்தில் நடைபெற்ற சமூக உளவியல் ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டு தலைமையுரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

கடந்த காலங்களிலே தமிழர் தாயகத்தில் இடம்பெற்ற போர் நெருக்கடிகளின்போது மக்கள் பல்வேறுபட்ட உளத்தாக்கங்களை சுமந்தவர்களாக இருந்தனர். இம்மக்களுக்கு பல்வேறுபட்ட நிறுவனங்கள் பல்வேறு வழிகளில் உளவளச் செயற்பாடுகளை வழங்கி வந்தன.

உளவளத்துணை வழங்குவது என்பது சுலபமான காரியம். ஆனால், அது எங்கள் மக்களின் பண்பாடுகளுக்கேற்ற வகையில் வழங்கப்படுகிறதா என்பது கவனத்தில் கொள்ளவேண்டிய விடயமாகும். ஆழிப் பேரலையின் போதும் பல்வேறுபட்ட உளவளச் செயற்பாடுகள் மக்களுக்கு வழங்கப்பட்டன. பல்வேறுபட்ட வகையில் வழங்கப்படும் உளவளச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து செயற்படுத்த வேண்டிய தேவை தமிழீழ சுகாதார சேவைக்குள்ளது.

கடந்த காலங்களிலே உளநல மேம்பாடு தொடர்பாக பல்வேறு ஒன்றுகூடல் மூலமாக பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டு அவை நடைமுறைப்படுத்தப்படாமல் இருந்துள்ளன. உளநல செயற்பாடுகளிலே எல்லோரும் இணைந்து பங்குபற்றமுடியாத சூழல் இருந்து கடந்த கால ஒன்றுகூடல்களிலே கலந்துரையாடப்பட்டதற்கு அமைவாக குழு ரீதியாக உளவளச் செயற்பாடுகளை முன்னெடுப்பது பொருத்தமாக இருக்கும்.

இன்றைய சந்திப்பில் குழுவொன்றினை அமைத்து அதன் கீழ் உபகுழுக்களாக செயற்பாடுகளை முன்னெடுப்பதுடன் கல்வி, சுகாதாரப் பயிற்சிகள் என்பவற்றை முன்னெடுப்பது தொடர்பாக செயற்பாடுகள் அமையும்.

உளவளச் செயற்பாடுகளில் உளவளத் துணையோடு செயற்படுகின்ற நிறுவனங்களும் இணைந்து செயற்படுவது தொடர்பாக தீர்மானித்துள்ளோம். இக்குழுக்கள் மாதந்தோறும் ஒன்றுகூடி உளவள மேம்பாடு தொடர்பாகக் கலந்துரையாடலாம்.

தற்போது ஒவ்வொரு நிறுவனங்களும் தங்களால் இயலுமான பணிகளை முன்னெடுத்து வருகின்றன. பல்வேறு இடங்களில் இடம்பெறுகின்ற உளவளச் செயற்பாடுகளை ஒருங்கிணைத்து செயற்படுத்துதல் தொடர்பாகக் கவனம் செலுத்தி வருகிறோம்.

தமிழீழ சுகாதார சேவையை பொறுத்தவரையில் தேசத்தின் சுகாதார மேம்பாட்டில் மிகுந்த அக்கறை கொண்டு செயற்பாடுகளை முன்னெடுத்து வருகிறது. இப்பணிகளிலே உளநல மேம்பாடு என்பது முக்கியமானது. எமது தேசத்திலே உளவளத்துணை நிபுணர்களையோ மற்றும் துறைசார்ந்தவர்களையோ உருவாக்காமையால் இருக்கின்ற வளங்களை ஒருங்கிணைத்து அதனூடாக எமது தேசிய நலன்திட்ட செயற்பாடுகளை முன்வைக்கலாம் என்பதில்தான் வெற்றி தங்கியுள்ளது - என்றார்.

முற்பகல் 10.45 மணியளவில் இடம்பெற்ற இந்நிகழ்வில், தமிழர் தாயகத்தின் உளவளச் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கான குழு ஒன்றும் அமைக்கப்பட்டது. இக்குழுவின் தலைவராக கிளிநொச்சி அன்னை இல்ல இயக்குநர் அருட் தந்தை எட்மன்ட் றெஜினோல்ட் தெரிவுசெய்யப்பட்டார்.

